பொருளடக்கம்

விஷயம்		பக்கம்
1, க்ஷயரோகமும் பி. சி. ஜி. மருந்தும்	— ஆசிரியர்	34
2. வைத்தியச் செய்திகள்		37
3. புற்றுரோகங்களுக்குச் சிகிச்சை	— வைத்தியர் வி. கனகசபை	40
4, சுகாதார உணவு	— நல்லுணவாளன்	41
5. பாலர் பரிபாலனம்	வைத்தியர் க. வேலாயுதபிள்ளை	45
6. நோய்களின் வகையும் தோகையும்	— வைத்தியர் ஏ. எஸ். இராசையா	47
7. மகோதரமும் அதன் சிகிச்சையும்	— வைத்தியர் அ. வி. இராசரத்தினம்	48
8. காய்ச்சலின் வரலாறும் மருந்தும் III	— வைத்தியர் நா. பொ.	52
9. தொண்டைக்கிரந்தி, நாசிக்கிரந்திகளின் வீக்கமும் மருந்தும் II	— வைத்தியர் S. A. R.	54
10. கெற்பவாயு	— வைத்தியர் ஏ. எஸ். ஆர்.	58
11. அ. இ. சி. ஆ. வை சங்கத்துக்கு நன்கொடைப்பணம் உதவிய அன்பர்கள்		60

"வைத்தியன்"

கௌரவ ஆசிரியர்:

வைத்தியர் **K. S.** பரிபூரணநந்தர் அவர்கள்

கௌரவ உறுப்பாளர்கள்:

வைத்தியர் **A.** கனகரத்தினம் அவர்கள் (கொழும்பு)

,, **M. S.** சுந்தரம் ,,

,, **V.** கனகசபை ,,

,, **A. S.** இராசையா ,,

கௌரவ செயலாளர்:

,, **S. A.** இராசையா அவர்கள்.

"நல் வினையுந் தீவினையு நின்று தெரிதருஞ்
செய் வினைக்கும் வித்தா முடம்பு"

வைத்தியன்

— திங்கள் வெளியீடு —

மலர் 2	விகிர்தி ஆண்டு கார்த்திகைத் திங்கள்	இதழ் 2

க்ஷயரோகமும் பி. சி. ஜி. மருந்தும்

ஆசிரியர்

உலகத்திலுள்ள நோய்களுக்குள் க்ஷயரோகம் மிகக் கொடிய தொற்றுநோயாகும். நோய்களுக்குள் இதை இராஜரோகமென்று கூறப்படுகிறது. உலகத்தில் இன்று இந்தநோய் இல்லாத நாடே கிடையாது. இலங்கையில் சமீபத்தில் எடுக்கப்பட்ட புள்ளிவிபரங்களின்படி சுமார் 70,000 பேருக்கு அதிகமானோர் இந்த நோய்க்கு அடிமைகளாகியிருக்கிறார்கள் என்று அறியக்கிடக்கிறது. இந்த நோயாளர் ஒவ்வொருவரும் இறக்குமுன் மேலும் பத்துப்பேருக்காகுதல் பரப்பிவிட்டுப் போகின்றனர். இத்தொற்றுநோயுடையோர் தினசரி நமது வேலைத்தலங்களுக்குப்போய் அங்குள்ளோருடன் கலக்கின்றனர். சாப்பாட்டுக் கடைகளிலும் தாராளமாகக் கலக்கின்றனர். படமாளிகைகள், பாடசாலைகள் முதலிய இடங்களிலும் இப்படியே. இங்ஙனமாக க்ஷயரோகம் உலகத்தின் பல்வேறு நாடுகளிலும் பரவி வருகிறது. எந்தவகையில் இந்த நோயைத் தடுக்கலாமென சகல நாடுகளும் முயற்சி செய்கின்றன.

இப்பொழுது உலகசுகாதார ஸ்தாபனம் (*W.H.O.*) ஒரு புதியமருந்தை எங்கும் க்ஷயரோகத் தடைமருந்தாய் உபயோகிக்கும்படி சிபாரிசு செய்துவருகிறது. நாளடைவில் நம்நாட்டில் யாவருக்கும் முக்கியமாய் மாணவர்கட்கும் இந்த மருந்தை ஊசிமூலம் ஏற்றப்படவிருக்கிறது.

இதன் பொழிப்புரை :- சூக்குமதேகம் நன்மை தீமை என்னும் இருவகைச் செயலும் பொருந்தி இது செய்யத்தகும் இது தகாது என்று அறிவுறுத்துவதுமன்றி அவ்வறிவுக்கு ஏற்றபடி செய்வதற்கும் முதற்காரணமாகும்.

இதன் பெயர்தான் பி. சி. ஜி. இந்தப்பெயர் இதைக் கண்டுபிடித்தவரின் நாமத்தால் அழைக்கப்படுகிறது. ஆங்கில அரசாங்கம் ஆட்சிசெய்த காலங்களில் அம்மைப்பால் குத்தவேண்டும், பேதிக்குத் தடுப்புப்பால் குத்தவேண்டும் என்றெல்லாம் கேள்விமுறையில்லாது குத்திவந்ததுமல்லாமல், குத்திக்கொள்ளாவிட்டால் கோர்ட்டுமூலம் வழக்கும் தொடர்ந்தார்கள். அம்மைப்பால் குத்தியவர்கட்கு அந்நோய் மறுபடி வரவில்லையா? ஆனால் இன்று நாம்கூறும் பி சி. ஜி. ஊசிமருந்து மிகப் பயங்கரமானமுறையில் தயாரிக்கப்பட்டிருக்கிறதையும், அதன் பலாபலன்களையும் மக்கள் அறிந்து சீர்தூக்கிப் பார்க்கவேண்டுமென்பதே எமது அவா. க்ஷயரோகம் ஒருவித க்ஷயக்கிருமி நம் தேகத்தினுள் தொற்றுவதினால் உண்டாகிறதென்றும், அக்கிருமிகள் கண்ணுக்குத் தெரியாத சிறியனவென்றும், இவைகளை ஆங்கிலத்தில் 'பாசிலை' (*bacilli*)யென்றும், மனிதனில் காணப்படுவன 'ஹியூமன் பாசிலை' (*human bacilli*) யென்றும், மிருகங்களில் காணப்படுவன 'பொவைன் பாசிலை' (*bovine bacilli*) என்றும், பறவை இனங்களில் காணப்படுவன 'ஏவியன் பாசிலை'(*avian bacilli*)என்றும், இக்கசக்கிருமிகளும் பலவிதமாய் மனிதனில்பரவிக் கசத்தை உண்டு பண்ணுமென்றும் ஆங்கில முறையில் கூறுவர். இங்ஙனம் கூறப்படும் கசக்கிருமிகளை உயிருடன் சேகரித்து ரசாயனமுறையில் வீரியம் நிறைந்த கசக்கிருமிகளாகும்படி வளர்த்து நம்தேகத்தினுள் ஊசிமூலம் க்ஷயரோகத் தடுப்பு மருந்தாய் ஏற்றப்படுகிறது. இக்கிருமிகளை 'லைவ் வக்சீன்'(*live vaccine*) என்பர். இம்மருந்து தயாரிக்கப்பட்டு ஏழு நாட்களுக்குள் குத்தப்படல்வேண்டும். இங்கிலாந்திலும், இந்தியாவில் பல இடங்களிலும் இம்மருந்திற்கு எதிர்ப்பு இருக்கிறது. அங்கு டெல்லியிலும், மதனப்பள்ளியிலும ஊசிபோடுவதற்குவேண்டிய பி. சி. ஜி. மருந்தைக் கிண்டி என்ற இடத்தில் தாபிக்கப்பட்டிருக்கும் நிலையத்தில் உற்பத்தி செய்கிறார்கள்.

இதைக் குத்திக்கொண்டவர்களுக்கு ரணமேற்பட்டால் பலமாதங்களாய் ஆறாமலும் இருப்பதுண்டு. வேறு சில வியாதிகளையும் கிளப்பிவிடலாம். இதைக் குத்திக்கொண்டால் எவ்வளவுகாலம்வரை கசம் வராமல் தடுக்கப்படலாமென்பது நிச்சயமாய் யாராலும் சொல்லமுடியவில்லை. இதைக் குத்துமுன்பு பெற்றோரிடம் ஆபத்து வந்தால் கேள்வியில்லாதபடி கையொப்பம் பெற்றுக

கொள்ளுவார்கள். இந்த மருந்தை நம்நாட்டின் தேவைக்குப் போதுமான அளவில் பெறுவதற்கு எத்தனையோ கோடி ரூபாய் செலவாகப்போகிறது இந்த மருந்தைப் பற்றிக் கல்கத்தா ஆங்கிலவைத்தியக் கல்லூரியிலுள்ள க்ஷயரோக நிபுணரைக் கேட்டதற்கு அவர் பி. சி. ஜி. க்ஷயரோகத்தை இதுவரை பூரணமாய்த் தடுத்ததுமல்ல இனிமேலும் தடுக்கப்போவதுமல்ல என்று கூறினர்.

• (Dr. P. K. Sen, chest specialist Medical College, Calcutta, says in one of his speech:— "In fact B. C. G. never was and would be a complete answer against Tuberculosis")

இந்த மருந்தைப் பரப்ப விரும்பும் சிலர் மேலைநாடுகளில் இதனல் க்ஷயம் அறவே நீங்கிவிட்டதாய்க் கூறமுற்படுகின்றனர். உலக சுகாதார தாபனத்தின் க்ஷயரோகப்பகுதி (*W. H. O*) டக்டர் ஜே. பி. மக்டனல்ட் அவர்கள் ஐரோப்பிய நாடுகளில் பலவித க்ஷயரோகத் தடுப்பு வழிகளுடன் பி. சி. ஜி. யையும் கையாண்டு ஒரு அளவில் வெற்றிபெற்றுள்ளோம் என்று கூறுகின்றனர். ஆகவே பி. சி ஜி ஒன்றேதான் இந்தநோயைத் தடுத்துவிட்டதென்று கூறுவதற்கில்லை. ஆகவே ஆயுள்வேத முறைகளையும், மற்றும் முறைகளையும் ஆராய்ந்து பாராமல் அபாயமான உயிர்க்கசக் கிருமிகளை எந்த நாட்டிலோ சேகரித்து வந்து அவற்றிற்கு அதிக விலை பெற்றுக்கொண்டு கசநோயில்லாத உடம்பினுள்ளும் செலுத்திவிடுமுன் அரசாங்கம் இதனைஊன்றியோசிக்க வேண்டும். எங்கள் பல வைத்தியசங்கங்கள் ஆயுள்வேத வைத்தியசாலைகளை ஆரம்பித்து அதில் க்ஷயரோகிகளை வைத்து ஆராய்ந்து சரிகண்டமருந்துகளைக் கொடுத்துப் பார்க்கும்படி பலமுறை தீர்மானங்கள் நிறைவேற்றிச் சுகாதாரமந்திரி அவர்கட்கு நேரில் சமர்ப்பித்துள்ளது. இதற்கு அரசாங்கம் இதுவரை செவிசாய்க்கவில்லை. கோடிக்கணக்கான ரூபாய்களை செலவுசெய்து நம்நாட்டிற்குப் பொருத்தமில்லாத கொடிய உஷ்ணமருந்துகளை வருத்தித் தேகபுஷ்டியில்லாத சத்தான உணவு கிடைக்கப் பெருத ஏழைமக்களிடம் அனுவசியமாய் ஊசிகுத்துதல் சரியாவென்று யாவராலும் சிந்திக்கற்பாலது. பி.சி. ஜி, ஊசி கட்டாயமாக யாவருக்கும் ஏற்றப்பட வேண்டுமென்று அரசாங்கம் சொல்லக்கூடிய காலம் வரும் போது மட்டும் நாம் இதைப்பற்றி ஆராய்வதிலும் காலத்தோடேயே இதன் பலாபலன்களைச் சீர்தூக்கிப் பார்ப்போமாக.

முடிவில் நம் சித்த ஆயுள்வேத முறைகளைப்பற்றி ஒரு வார்த்தைமட்டும் கூறுவோம். நம் 4448நோய்களுள்ளும் க்ஷயரோகம் ஓர் ராஜநோயாய்க் கண்டிருக்கிறது. க்ஷயரோகமானது: சுரரோகம் அரசனுகவும், காமாலை ரோகம் மனைவியாகவும், பாண்டுரோகம் சேனுபதியாகவும், ரத்த பித்தரோகம் புத்திரனுகவும், காசரோகமும் சுவாசரோகமும் மந்திரிகளாகவும், வாதபித்த ரோகங்கள் காவற்காரர்களாகவும், வாந்திரோகமும் அரோசகமும் கட்டியக்காரர்களாகவும். சோபைரோகமும் அதிசாரரோகமும் சிநேகிதர்களாகளாகவும், பீநசரோகம் பொக்கிஷத்திரவியமாகவும், கண்டத்தொனிகள் பேரிகை முதலிய வாத்தியங்களாகவும், மற்ற ரோகங்கள் பரிசனங்களாகவும் பெற்றிருக்கிறதினுல்....என்று நம் பெரியோர்கள் அக்காலத்திலேயே நிதானித்திருக்கும்சிறப்பு இதனை எத்தனைதூரம் ஆராய்ந்து அதற்குரிய மருந்துகளையும் ஆராய்ந்து கண்டு நமக்குத் தந்திருக்கின்றனர் என்பது புலப்படும். எத்தனையோ க்ஷயரோகிகளை எக்ஸ்றே படத்துடன் தமிழ்மருந்தால் மாற்றி வைக்கப்பட்டிருக்கச் சிலர் மேடைகளிலும் ஏறிச் சித்த ஆயுள்வேத வைத்தியத்தைக் குறைகூறி வருகின்றனர். எத்தனையோ டக்டர்கள் இருக்க இந்திய அரசாங்கத்தின் ஜனுதிபதி ராஜேந்திரப் பிரசாத் தமது அரண்மனை வைத்தியராய் ஒரு ஆயுள்வேத வைத்தியரை நியமித்திருப்பது நம நாட்டு வைத்தியத்திற்குப் பெருமைதருவதாகுமல்லவா? இந்த முன்மாதிரியைக்கண்டேனும் இச்சிறு இலங்கைத் தீவை ஆளுவோர் இனியேனும் கண்விழிப்பார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. ❋

வைத்தியச் செய்திகள்

தூதுக்கோஷ்டி

அகில இலங்கைச் சித்த ஆயுர்வேத வைத்திய சங்கத்தின் தலைவரும் உப தலைவரும் அடங்கிய தூதுக்கோஷ்டி சென்றமாதம் 17-ம் திகதி சுகாதார மந்திரியைப் பேட்டி காண்பதற்காக கொழும்பு சென்றிருந்தது. அவ்வமயம் சுகாதார மந்திரி அவர்கள் கந்தோரில் இல்லாமையினுல் சுகாதார மந்திரியின் நிரந்தரக் காரிய தரிசியைக் கண்டு சென்றமாதம் நடைபெற்ற விசேஷ பொதுக் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்களைச் சமர்ப்பித்து, அத்தீர்மானங்களில் உள்ளவற்றை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்

டியதின் அவசியத்தை வற்புறுத்தி விளங்க வைத்தது, அநேக மான தீர்மானங்களை அரசாங்கம் அங்கீகரித்து ஆவன செய்யு மென எதிர்பார்க்கப்படுகிறது. அபினி விநியோகம் உடனே கவ னிக்கப்படுமென அறிவிக்கப்பட்டதற்கிணங்க லைசென்ஸ் உள்ள வைத்தியர் யாவருக்கும் தற்போது அபினி விநியோகிக்கப்படுகின் றது. இச்சங்கத்தின் தொடர்பான வற்புறுத்தலின் பேரில் இந்தி யாவிலிருந்து அபினை அரசாங்கம் இறக்குமதி செய்து இலங்கை யின் எல்லா மாகாணங்களிலும் விநியோகிக்கப்படுகின்றது.

வைத்தியர் பதிவு நடவடிக்கை

சுதேச வைத்தியர் பதிவுக் கம்மிட்டி வைத்தியர்களைப் பதிவு செய்யும் முதல் நடவடிக்கையாக, விண்ணப்பம் செய்திருப்பவர் கள் 1946-ம் ஆண்டில் எடுக்கப்பட்ட சனத்தொகை மதிப்புப் பத்திரத்தில் "வைத்தியர்" என பதியப்பட்டிருக்கிறார்களா? என் பதை ஆராய்கின்றது. இதனை விசாரித்து ஒவ்வொரு வைத்திய ருக்கும் பதிவு சபைத் தலைவர் திரு. டொனல்ட் ஒபயசேகரா வால் கடிதம் எழுதப்பட்டிருக்கின்றது. அடுத்தபடியாக விண்ணப் பத்தார்களின் பெயர்களை மாகாண அதிபர்களுக்கு அனுப்பி, அதில் உள்ளவர்கள் வைத்தியர்கள்தானா என்பதை கிராமாதிகாரி கள் மூலம் விசாரித்து அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின் றார்கள். அதன்படி கிராம விதானைமார் தங்கள் விசாரணைகளைச் செய்து மாகாண அதிபருக்கு அனுப்பிக்கொண்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

கொழும்பு சுதேச வைத்தியக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றவர்கள் சுமார் 300-க்கு மேற்பட்டவர்களை சுதேச வைத் திய அதிகாரசபை பதிந்து அவர்களுக்கு உத்தரவுச்சீட்டு வழங்கி யிருப்பதாகவும், அச்சபை இலங்கையில் உள்ள சுதேச வைத்தி யக் கல்லூரிகளில், யாழ்ப்பாணம் லங்கா ஆயுள்வேத சித்தவைத் தியக் கல்லூரியையும், கம்பகா ஆயுள்வேத வைத்தியக் கல்லூரி யையும், இந்தியாவிலுள்ள சில கல்லூரிகளையும் அங்கீகரித்திருப்ப தாகவும் அறியப்படுகிறது.

வைத்தியசாலைத் திறப்புவிழா

சென்ற மாதம் 20-ந் திகதி ஓர் வைத்தியசாலை ஸ்ரான்லி றோட்டிலுள்ள 81-ம் இலக்கக் கட்டிடத்தில் பிரபலவைத்தியரும், அகில இலங்கைச் சித்த ஆயுள்வேத வைத்திய சங்கக் காரியதரிசி யுமான திரு. ஏ. சி. இராசையா அவர்களால் திறந்துவைக்கப்பட் டது. அச்சமயம் அநேக வைத்தியர்களும், வைத்திய அபிமானி களும் கூடியிருந்தனர். மேற்படி வைத்தியசாலையில் வைத்தியர் திரு. வை. கனகரத்தினம் அவர்கள் கடமையாற்றுவர்.

மரவள்ளியும் இஞ்சியும்

பலப்பிட்டியாவைச் சேர்ந்த ஹக்கினிதீஸின் சில்வா என்னும் 19 வயது இளைஞர் மரவள்ளிக்கிழங்கையும், இஞ்சியையும் ஒன்ருக அவித்துச் சாப்பிட்டதனல் சென்றமாதம் 13-ந் திகதி மரணமடைந்தார்.

ஆயுர்வேத மருந்து உற்பத்திச்சாலை

2,500,000 ரூபாய் செலவில் ஆயுள்வேத மருந்து உற்பத்திச்சாலை அமைக்க முதலில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருந்தது. மந்திரிசபை உத்தாவின் பேரில் அது கைவிடப்பட்டு இப்பொழுது சுமார் 1,090,000 ரூபாய் செலவில் ஒரு சர்க்கார் மருந்து உற்பத்திசாலை அமைக்கத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

புதிய திட்டத்தின்கீழ் மருந்து விற்பனைமூலம் வருடா வருடம் 450 000 ரூபாய் வருமானம் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. மருந்துச்சாலை செலவு வருடா வவடம் சுமார் 393,000 ரூபாய் ஆகுமென்றும் ஆகவே வருடத்திற்கு 57,000 ரூபாய்வரை லாபம் கிடைக்கலாமென்றும் கருதப்படுகிறது.

புதிய திட்டத்தில் மருந்துச்சாலைக்கான கட்டடச் செலவுகளும் கணிசமான அளவு குறைக்கப்பட்டிருக்கிறது. பின்னல் விஸ்தரித்துக்கொள்வதற்கு வசதியாக கட்டடங்களை சிறிதாக அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

மருந்து உற்பத்திசாலைக்கு மிகவும் அவசியமான சாமான்களே இறக்குமதி செய்யப்படும். மற்றவை இலங்கையிலேயே பெறப்படும்.

சென்னை சர்க்கார் வெளியிட்ட வைத்திய நூல்கள்

சென்னை அரசாங்கம் 'தஞ்சாவூர் சரஸ்வதி மஹால்' நூல் நிலையத்திலிருந்து பல ஏட்டுப்பிரதிகளை அச்சிட்டுப் பிரசுரித்திருக்கின்றது. அவ்வேட்டுப் பிரதிகள் சரபோஜி மகாராஜாவினல் தொகுக்கப்பட்டவையாகும். 18 தொகுதிகள்கொண்ட மேற்படி நூலில் முதல்தொகுதியில் குன்மரோக சிகிச்சையும், இரண்டாவது தொகுதியில் கெற்பரோக பாலரோக சிகிச்சைகளும், மூன்ருவதில் நயனரோக சிகிச்சையும் அடங்கியிருக்கின்றன. இம் மூன்று தொகுதிகளும் தற்போது பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. அச்சிலிருக்கும் மற்றுந்தொகுதிகள் கூடியவிரைவில் பிரசுரமாகும். அவற்றில் சுவாசகாசம், நீரிழிவு, பாண்டு, காமாலை முதலிய ரோக சிகிச்சைகளும், மாட்டு வைத்தியமும் அடங்கியிருக்கின்றன.

''காலை விளாங்கனி கடும்பகல் சுக்கு மாலை கடுக்காய் மண்டலம் தின்பரேல் கோலை ஊன்றிக் குனிந்து நடந்தவர் கோலை வீசிக் குலாவி நடப்பரே''

புற்றுரோகங்களுக்குச் சிகிச்சை

— வைத்தியர் வி. கனகசபை —

பஞ்ச பாஷாண பதங்கம்

வெள்ளைப் பாஷாணம், லிங்கம், மனோசிலை, கெந்தகம், இரச கர்ப்பூரம் இவை வகை பலம்-1. தனித்தனி சுத்தி முறைப்படி சுத்தி செய்து கொள்ளவும்.

செய்முறை: முதலிற் கெந்தகத்தைப் பொடிசெய்து, இரசத்துடன் கலந்தரைத்து மற்ற மருந்துகளை ஒன்றன்பின்னொன்றாகச் சேர்த்து அரைத்துப் பொடி செய்து கொள்ளவும். பின் இதனை வெற்றிலை, பருத்தி, வெள்ளறுகு, துளசி உத்தமாகாணி, பொடுதலை இவைகளின் சுய ரசத்தால் வகைக்கு 4 சாமமரைத்து நான்கு வில்லைகள் செய்து வெய்யிலில் நான்கு நாள் உலர்த்தி, ஒரு சட்டியில் வெற்றிலையைப் பரப்பி, அதன் மேல் ஒரு வில்லையை வைத்து, மேலும் வெற்றிலைபால் மூடிப் பொருத்தமான சட்டியால் வாய் மூடிச் சந்து வாய்க்கு மண்ணப்பி ஏழுசீலை மண்செய்து காய வைத்து, அடுப்பின்மீதேற்றி நான்குசசமம் சிறு தீயாய் எரித்து ஆற விட்டுச் சட்டியை மெதுவாய் இறக்கி மண்சீலையைப் பிரித்து மேற்சட்டியில் ஏறியிருக்கும் பதங்கத்தைச் சேதப்படாமற் சுரண்டியெடுத்துப் பத்திரப்படுத்தவும். இப்படியே மற்ற வில்லைகளையும் எரித்து எடுத்துக் கொள்ளவும். இது சிவப்பாயிருக்கும்.

உபயோகம் :- நோயின் வன்மை, மென்மைக்கேற்ப ஒன்று முதல் இரண்டு அரிசியிடை தேன், இஞ்சிச்சாறு, நெய், ஆமணக்கெண்ணெய் இவைகளில் கொடுக்கவும்.

தீரும் நோய் :- புற்றுக்கிரந்தி, குட்டம், சூலை, வாயு, வாதம், மேகம், குன்மம், கிராணி, கை கால் முடக்கு, கண்டமாலை, பவுந்திரம், பிளவை, அரிகரப்பன், பெருவியாதி, தேமல், சொறி, திமிர், வண்டுகடி, கழல்வாதம், அண்டவாதம், குழிவாதம், வலிப்பு, கபால குட்டம், மேகரணம், கிரந்தி, அரையாப்பு, கபாலசூலை முதலிய பிணிகள் தீரும்.

குறிப்பு :- எரிப்பின் பேதத்தினாற் சிலவேளை இம்மருந்து வெண்ணிறமான பதங்கமாயுஞ் சட்டியின் மேற் காணப்படும். அதனால் மருந்து குணத்திற் குறை வடையாது. சிறிது வீரிய முடையதாயிருக்கும். அளவிற் சிறிது குறைத்துக் கொடுக்கவும். (தொடரும்)

ஆண்மலட்டுரோக லக்ஷணம்

புருஷர்களின் விந்துவானது தித்திப்பு இல்லாததும், சலத்தில் விட்டால் கரைந்து மிதப்பதும், உயிர்ப்பற்றதும், மூத்திரத்தில் நுரைகட்டுவதுமாயிருக்குமாயின். அதனால் ஒருக்காலும் கருப்பந் தரிக்க மாட்டாதென்று அறிக. இதனால் பெண்கள் மட்டுந்தான் மலட்டுத்தன்மை உடையவர்களென்பது நிராகரிக்கப்படுகிறது .

சுகாதார உணவு III.

— நல்லுணவாளன் —

முற்றொடர்களில் மாச்சத்துக் கொழுப்புச் சத்துகளைப்பற்றியும், அவை உடம்பில் கூடக்குறையச் சேர்வதாலுள்ள குற்றங்களையும், அவற்றைச் சமநிலையில் உண்பதால் வரும் நன்மைகளையும் எழுதினோம். இனி, மூன்றாவதாக உடம்பின் தசையை (மாமிசத்தை)ப் பிரதானமாக வளர்க்கும் பிசித (protein)ச் சத்தைப்பற்றி அறிவோம். இச்சத்து இரு வகைப்படும். அதில் தாவர வர்க்கப் பிசித (vegetable protein) ச் சத்து, விசேஷமாகச் சோயாக் கடலையிலும் பருப்பு பயறு கடலை உளுந்து முதலிய இரணை வித்துப் (pulses) பொருட்களிலும்; பிராணிவர்க்கப் பிசித (animal protein) ச் சத்து பால் முட்டை மச்ச மாமிச உணவுவகைகளிலுமுண்டு. இவை தசையை உண்டாக்கி அதன் வளர்ச்சிக்கும் காரணமாயிருப்பதோடு சுறுசுறுப்பையும் பலத்தையும்* கொடுக்கின்றன. உணவில் இச் சத்துக் குறைந்தால் வளர்ச்சி குன்றி உடல் நோய்க்கிடமாகி ஆயுளும் அற்பமாகும். பிசிதச் சத்துகள் ஈரல் இரணைவித்து முட்டை பாலில் விசேஷமாகக் காணப்படுவதால் இவை உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாதன. மாச் சத்தும் கொழுப்புச் சத்தும் உற்சாகத்தையும் உஷ்ணத்தையும் உடலுக்கு ஊட்டி சாத்விக தாமத குணங்களைத் தருவதுபோல இது விறுவிறுப்பைத் தந்து இராசத குணத்தை† வளர்க்கும். இந்தச் சத்தில் தான் உடம்பை வளர்க்கும் உலோக (mineral) பொருட்களும் உப்பு (salt) வகைகளும் ராஜ (vitamin) சத்துகளும் ஏராளமாக உண்டு. உடற் தாதுக்களைப் புதிதாக உண்டாக்குவதற்கு பிசிதச் சத்து ஒன்றைத் தவிர மற்றச் சத்துக்களால் முடியாது. இன்னும் முட்டை சிவத்த முள்ளங்கி (carrot) வெங்காயம் போன்றவை

---

* பிசிதச்சத்து பெலம் தருமென்பதற்கு அதை மிகுதியாக உண்டு பல வீரச் செயல்கள் புரிந்து காட்டிய மேல்நாட்டு சாண்டோவும் கீழ்நாட்டு ராமமூர்த்தியும் போதிய சான்றாவர்.

† பண்டைக்காலம் தொட்டே தமிழர் சாஸ்திரரீதியாகவும் மத சம்பந்தமாகவும் காரணங்களோடு காரியஞ் செய்யும் மகா புத்திசாலிகளாகக் காணப்படுகின்றனர். 'மனம் அன்னமய கோசம்' ஆதலால் மனிதனின் மனப்பான்மை (குணம்) அவரவர் உணவின் மயமாகவே உண்டாகிறதென்று அறிந்து தொழில் முதலியவற்றிற்கு ஏற்ற மனப்பான்மையை உண்டாக்கும்படியான உணவை அவரவருக்கு நியமித்தனர். நான்கு வருணத்தாருள்ளும் இராசதகுண வாய்ப்பட்டுப் போர்புரியும் க்ஷத்திரியருக்கு மாமிச உணவையும் மதுவையும் கற்பித்தார்கள். சாத்வீக குணமுள்ள சந்நியாசிகளுக்கு பால் பழம் இளநீர் முதலியவைகளும். ஞானிகளுக்கு 'காய் கனி உதிர்சருகு கந்தமூலங்களும்' இல்லறத்தாருக்கு அறுசுவை உண்டி முதலியனவும் அவரவர் மனதுக்கும் செயலுக்கும் ஏற்றவாறு அமைத்திருக்கிறார்கள்.

சமிக்கப்பட்டு உண்டாகும் தைரோயிட் கிரந்திச்சத்து (tyroxine) முதலிய உடலுக்கு இன்றியமையாத பல பொருட்களைப் பிசிதச் சத்திலிருந்தே உடம்பு உற்பத்தியாக்குகிறது.

நாம் உண்ணும் எல்லாப் பிசிதச் சத்தும் இரைக் குடலில் உடைத்துப் பிரிபட்டு, சிறு குடலில் சமிக்கப்பட்டு, அமினோ அமிலங்களாக (amino-acids) மாறி, ஈரலுக்குச் செலுத்திச் சுத்தியாகிப் பக்குவப்படுத்தப்பட்டு, இரத்தோட்டத்தில் கலந்து பல அவயவங்கட்கும் சென்று அங்கங்குள்ள தேய்வுகளை நிரவி தேவையான புது வளர்ச்சிகளை உண்டாக்குவன. ஷ அமினோ அமிலங்களில் 225 விதத்துக்குமேல் இருப்பதாகவும் அவற்றுள் 24 தான் முக்கியமானவை என்றும் அறிகிறோம். சாதாரணமாக வேலை செய்யும் ஒருவர் பிசித உணவுகளை ஒரு நாளைக்கு $\frac{1}{4}$ றுத்தலுக்குக் குறையாமல் உண்ணவேண்டும். ஆனால் வளரும் பிள்ளைகளும் கெற்ப ஸ்திரீகளும் பால் ஊட்டும் தாய்மாரும் கூடிய அப்பியாசம் தொழில் செய்பவர்களும் குளிர் தேசத்திலுள்ளவர்களும் தகுந்தபடி அளவைக் கூட்டி உட்கொள்ளவேண்டும். **வளரும் பிள்ளைகளுக்குக் கொடுபடும் பிசிதச்சத்தில் மூன்றில் ஒரு பாகமாகுதல் பிராணி வர்க்கப் பிசிதச் சத்தாக இருக்கவேண்டியது இன்றியமையாதது.** ஏனெனில் இதிற் குறைந்தால் அவர்களின் வளர்ச்சி குன்றி விடுகின்றதென்று அமெரிக்க விஞ்ஞானிகள் ஸ்தாபித்திருக்கிறார்கள். தாவர பக்ஷணிகள் இந்தப் பிசிதச் சத்தைப் பாலின் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். அவர்கள் பருப்பு உளுந்து முதலிய தாவரப் பிசிதங்களைத் தவிர பிராணிப் பிசிதமாக அரைப்படி பாலுக்குக் குறையாமல் பருகுதல் அவசியமாகும்.

பொது ஜனங்கள் சாதாரணமாக பிசிதப் பொருட்கள் உண்பது மிகவும் குறைவு. பெரும்பாலோர் உண்டாலும் ஷ அளவு ($\frac{1}{4}$ றுத்தல்) உட்கொள்வதில்லை. அதனாலே அநேகர் எத்தொழிலைச் செய்தாலும் அதில் உற்சாகம் சுறுசுறுப்பின்றியும் அல்லது சோம்பேறிகளாகி வேலைசெய்யப் பின்னிட்டும் காலத்தைப் போக்குகிறார்கள். அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளும் சீவியகாலமுழுதும் நோய்வாய்ப்பட்டு வளர்ச்சி குறைந்து ஆயுளும் குன்றிவிடுகிறார்கள். கடற்கரையிலுள்ள மீன் பிடிப்பவர் (கரையார்) கள் பல வகையான மச்சங்களை ஏராளமாக உண்டு சுகதேகிகளாகக் காணப்படுகிறார்கள்; விதம் விதமான இறைச்சிகளைத் தாராளமாகச் சாப்பிடும் ஐரோப்பியரில் சகல பிரிவினரும் சுகத்துடன் இருக்கிறார்கள். சீனர் ஜப்பானியர் அமெரிக்கரும் ஊன்சத்துணவால் ஊறியிருக்கிறார்கள். கீழ்நாட்டிலுள்ள நாங்கள் மட்டும் சுகந்தரும் உணவுகளை உணராமல் நாக்குசிருக் கேற்றபடி பசிதீரப் புசித்து தனிச் சாதத்தாலோ தனி ரொட்டியாலோ வயிற்றை நிரப்பி உற்சாகம்

குறைந்து தாமதகுணம் நிறைந்து சோம்பலாய் உறைந்து அற்பாயுளாய் மறைந்து விடுகிறோம். இப்படித் தமக்கும் பிறருக்கும் இடைஞ்சலாயிருந்து நடைப்பிணமாகிக் காலத்தைக் கழிக்காமல் சுகாதார விதிகளை அநுசரித்தும் சமநிலையாகச் சத்துணவுகளைப் புசித்தும் சுகத்துடன் வாழ்வோமாக.

நாக்கின் ருசிக்காகச் சிலர் இனிப்பு உணவுகளை மிதமிஞ்சிச் சாப்பிட்டு நீரிழிவாலும் அதிலேற்படும் கட்டுகள் பிளவைகளாலும் அவஸ்தைப்படுவது போலவே இறைச்சி மீன் முட்டை முதலிய பிசித உணவுகளை சுவை இன்பத்துக்காக அளவுக்கு மீறிச் சாப்பிடுபவருக்கு தேகத்தில் உட்டினம் கூடி அது சலக்குடல் (kidreys) களை அவியச் செய்து தொழிற்படவிடாமல்; அநுதாபநாடி (sympathetic nerevs) களை மிதமிஞ்சி உற்சாகப்படுத்தி இரத்தக் கொதிப்பை (high blood pressure) உண்டாக்கி; அதன் கிளை வியாதிகளான பாரிசவாதம் இரத்தபித்தம் சந்நி முதலானவற்றிற்கும் அடிகோலுகிறது. இறைச்சிவகைகளை அளவுக்கதிகமாகச் சாப்பிடுபவர்கள் அநேகமாக மதுபானம் குடிப்பவராகக் காணப்படுகிறார்கள். அவ்விதமே மதுபானம் உபயோகிக்கிறவர்களுக்கு இறைச்சியில் விசேஷ விருப்பம் உண்டாவது இயற்கையே. கூடிய பிசிதச் சத்தோடு மதுபானமும் சேர்ந்துவிட்டால் ஈரலும் இந் நஞ்சு வெப்பத்தால் தாக்கப்பெற்று அவியத்தொடங்கி, பிறகு சுடப்பட்டுக் கருகிவிடுகிறது (cirrhosis). நாட்செல்லச் செல்ல இரைக்குடல் சிறுகுடலும் அவிந்து (gastritis), பிறகு புண்பட்டு (gastric & duodenal ulcers), இரத்தம் கக்கி; சில வேளைகளில் அது கடுமையாகி மரணமும் சம்பவிக்கிறது.

பிசிதச் சத்துக்கள் சிறு குடலில் சமிக்கப்பட்டு அமினோ அமிலங்களாக மாறி ஈரலுக்குப் போவதாகக் கூறினோம். ஒரு சுக தேகியின் ஈரலானது எல்லா அமினோ அமிலங்களையும் சுத்திகரித்துப் பக்குவப்படுத்தி உடலுக்கு உகந்தவற்றை எடுத்துக்கொண்டு தேவையில்லாத அமோனியா (ammonia யூறியா (urea) யூறிக் அமிலம் (uric acid) முதலியவற்றை இரத்தத்தில் கழித்துவிடுவதே அதன் தொழில். இரத்தோட்டத்தில் கலந்திருக்கும் இக் கழிவுப் பொருட்களை சலக்குடல்கள் வடிகட்டி மூத்திரத்தின் மூலமாக வெளியேற்றிவிடுகின்றன. ஈரலின் நோயால் அல்லது பிசகால் பக்குவமாகாத சில அமினோ அமிலங்கள் ஈரலிலிருந்து இரத்தத்தில் கலந்து ஓடும்போது சிலருக்குத் தேகத்தில் தடித்துக் கரப்பன் உண்டாகும்; வேறு சிலருக்குத் தும்மலும் பீனிசமும் உண்டாகும்; மற்றும் சிலருக்கு ஈளை (தொய்வு) உண்டாகும்; இன்னும் சிலருக்கு வாதமோ கீல் வீக்கமோ (arthritis); யூறிக் அமிலம் அங்கங்கு விரற் கீல்களில் தடைப்பட்டு நின்று கணுவாதமோ

(gout) உண்டாகும். இன்னும் வேறும் சில பிசிதச் சத்துக்கள் இரத்தத்தில் கலந்து ஓடுவதால் அவை அநுதாப நாடி வியூகத்தை அழற்சிப் படுத்தி இரத்தக் கொதிப்பை உண்டாக்குவன. யூறிக் அமிலமும் பக்குவம் அடையாத அமினோ அமிலங்களும் சலக் குடல்களை அழற்சி செய்வதால் அவியச் செய்கின்றன (nephritis). இந்த வீக்கநோயில் அநேகவிதமான உப்புகள் சலத்துடன் வெளி யேற்றப்படாமல் உடலில் தங்கி தாதுக்களை வெப்பம் அடையச் செய்ய, அவை தாகத்தினால் (வெளியேறவேண்டிய) சலத்தை உறிஞ்சி வைத்திருப்பதால் உடம்பு வீங்குகிறது. சலக்குடல் வீக்க நோய் அதிலுள்ள இரத்தக் குழாய்த் தொகுதிகளையும் சுரப்பிகளை யும் வீங்கி அவியச் செய்வதால் சுரக்கிற வடிக்கிற தொழில்கள் தடைப்படுகின்றன. தடைப்பட்டவுடன் மூத்திரம் வெளியேறாமல் உடம்பில் தங்கவே அது வீங்கிவிடுகிறது.

இதற்குப் பரிகாரமாவது சலக்குடல்களை அதிகம் வேலை செய்ய விடாமல் ஆறுதல் கொடுத்து மலக்குடல்களைக்கொண்டு அத்தொழில்களைச் செய்யப்பண்ணி நச்சு நீர்களைக் கழிப் பதே. சலக்குடல் செய்யமுடியாத வேலையை அதைப்போல் கழிவு வேலை செய்யும் உதவி உறுப்பான தோலைக் கொண்டு வெயர்வை உண்டாக்கும் முயற்சிகளைக் கையாளவேண்டும். கத்தரிக்காயும் பப்பாளி அன்னுசி தக்காளிப் பழங்களும் கிழங்குவகைகளும் அவி யல் பிடித்த சலக்குடலுக்கு இன்னும் அதிக தீங்கை விளைவிப்பன. வெளியேறாமல் உடம்பில் தங்கிய உப்புகளே அதன் வீக்கத்துக்குக் காரணமாதலால் கறி உப்பை அறவே நீக்கி நீர்ப்பேதி மருந்துகளை யும் அப்படியான ஆகாரவகைகளையும் கொடுக்கவேண்டும். இதனால் உடம்பில் சேர்ந்த நச்சுப் பொருட்கள் வெளியேற்றப்பட்டு அநு தாபநாடி வியூகம் அழற்சி குறைந்து சாதாரண நிலைமைக்கு வரும். இரத்தக் கொதிப்பும் தன்பாட்டில் குறையும்

இரத்தக்கொதிப்பைத் தணிப்பதற்குப் பத்தியமாவது உற் சாகம் ஊட்டும் மதுபானம் புகையிலை தேயிலை காப்பி கொக்கோ முதலியவற்றையும் அநுதாபநாடி வியூகத்துக்கும் சலக்குடல்களுக் கும் ஆகாத விசேஷ பிசிதச் சத்துக்களான முட்டை பால் மீன் இறைச்சி முதலியவற்றையும் உப்பையும் தவிர்க்கவேண்டும். மல சலத்தை நன்றாகக் கழிக்கும் கீரைவகை, தோடம்பழம், முந்திரிப் பழம்,சுரை பீர்க்கு புடல் முதலிய பிஞ்சுகள், மோர் இளநீர் புழுங் கல்அரிசி முதலியவற்றைத் தாரளமாக உட்கொள்ளவேண்டும்.

"வாதம் அலாது மேனி கெடாது, பித்தம் அலாது மந்தம் வராது கபம் இலாது விக்கல் எடாது, சீதம் இலாது சுரம் வராது."

பாலர் பரிபாலனம்

— வைத்தியர் க. வேலாயுதபிள்ளை —

★

சகல பெற்றோர்களுக்கும் தங்கள் தங்கள் சேய்களுக்குறும் பிணிகளும் அவற்றின் குறிகுணங்களும், அவற்றிற்குத் தகுந்த சிகிச்சைகளும் தெரிந்திருத்தல் அவசியமெனக் கருதி யான் கற்றறிந்தனவற்றிலும் அநுபவத்திற் கண்டவற்றிலும் எளிதிற் கையாளக்கூடிய சிலவற்றை நம் 'வைத்திய' னுக்குச் சிறுகட்டுரைகளாகக் கொடுக்கத் துணிந்துள்ளேன். நமது குழந்தைகளுக்குண்டாகும் நோய் அனந்தம். அவற்றுள் சில,

"பாரே குழந்தைப் பிணிகுறிப்பும் பகரும் பட்சி தோஷமுடன்
நேரே மாந்தம் பதினெட்டும் நிகழ்த்தும் கிரந்தி தன்குணமும்
சீரே புணர்ச்சிக் காந்தியதும் சிறந்த கெற்பச் சூடுமுதல்
நேரே மாந்த ரறியவென்று நிறையா யுரைத்த தியலாமே"

என்று அகஸ்திய முனிவர் முதல் நம் சித்தர் ஈறுகச் சொல்லிப் போந்தனர். இவ்வாறு பாலருக்குண்டாகும் நோய்களில் முதலில் கிரந்திநோயின் குணமும் அதற்கு எளிதிற் செய்யக்கூடிய சிகிச்சை சிலவற்றையும் கூறுவாம்.

கிரந்தி பலவற்றில் **செங்கிரந்தி, கருங்கிரந்தி** மிக முக்கியமானவை. அதில் செங்கிரந்தி உண்டான பிள்ளையைப்பற்றி முதல் அறிவோம். இக்கொடிய செங்கிரந்தி நோயானது பலவிதரோகங்களையும் உற்பத்தியாக்கும் தன்மையுடையது. இந்நோய் தொடங்கின உடனேயே பாலனைச் சிவமோசஞ்செய்யும் சக்திவாய்ந்தது. இந்நோயில் பிள்ளை பிறந்ததும் வயிறூதிக்கொள்ளும். பூனைக்குரல் போலக் கேரிஅழும். மலமூத்திரம் கட்டிக்கொள்ளும். தொண்டையும் கட்டிக்கொண்டு கம்மும். கால் கரம் முதல் சிவக்கும். இக்குணங்கள் கண்டவுடன் முதலாவது 1, 2 குன்றுமணியளவு கோரோசனையை முலைப்பாலில் உரைத்துக் கொடுத்துப் பிறகு குன்றுமணியிலை, கற்பூரவள்ளியிலை, வெங்காயம் சமநிறை எடுத்துப் பிழிந்து ஒரு தேக்கரண்டி சாற்றைச் சூடாக்கிய கரண்டியில்விட்டு முறித்துக் குழந்தைக்குப் புகட்டவும். தாய் இச்சாபத்தியமாக இருக்கவும். தீரும்.

இரண்டாவது கறிமுருங்கைஇலைச் சாற்றையும் மேலேசொல்லியபடி முறித்துக் கொடுக்கவும். செம்முள்ளிக் கீரையை அவித்துப் பிள்ளைக்கு அந்த நீரால் குளிக்க வார்க்கவும். மாறும். இவை எமது அநுபவக் கைமுறைகள்.

"மேகம் அன்றிச் சூலையில்லை; கபம் அன்றிக் காசம் இல்லை"

3. பொடுதலைக்கொடி, கடுக்காய்த்தோல், கருஞ்சீரகம் சமனாக எடுத்து அரைத்துக் கிரந்திச் சிவப்புகளுக்குப் பூசிப் பொழுதுபட வெந்நீரால் கழுவிவிடவும்.

4. மஞ்சாடியிலை, பாவட்டமிலை தோடம்பழச்சாறு விட்டு அரைத்து அதைவிட்டுக் கொதிப்பித்துப் பூசத் தீரும்.

5. செம்பருத்தி இலையைப் புளித்தோடம்பழச்சாறு விட்டு அரைத்துக் கொதிப்பித்து ஒரு துணியில் தடவிச் சிவப்புள்ள இடங்களில் போடவும். பிறகு எடுத்துப் பிழிந்துவிட்டுப் புதுத் துணி போடவும். இப்படியே சிவப்புநிறம் மாறும்வரை போடவும்.

6. புங்கம்பட்டையைத் துருவிய பூ 3 களஞ்சு; கருஞ்சீரகம், திற்பலி, வசம்பு, சந்தனம், மாயாக்காய், அதிமதுரம், ஓமம் இவை வகைக்கு ஒருகளஞ்சு பொடிசெய்து ஷை துருவலுடன் கலந்து சட்டியில் ½ படி நல்லெண்ணெய் விட்டு அதில் தூளைப் போட்டுப் பிசைந்து வெய்யிலில் 3நாள் ஊறவைத்து 4-ம்நாள் வேறு கலசத்தில் வடித்து உள்ளுக்குப் 10 முதல் 30 சொட்டுவரை புகட்டி மேலுக்கும் பூசவும். சாயந்தரம் இலுப்பை அரைப்பை நன்றாக அரைத்து இலேசாகத் தடவிக் கழுவிவிடவும். செங்கரப்பன் மாறும்.

7. செப்புநெரிஞ்சில், வெங்காயம் சமன் எடுத்துத் தட்டிப் பிழிந்த சாற்றுடன் நற்சீரகத்தைச் சூடுகாட்டிப் பொடிபண்ணின தூளும் போட்டுக் கலக்கிப் புகட்டவும். செங்கரப்பன் தீரும்.

8. பிள்ளைக்கற்றாழை மடல் ஒன்றைச் சுடுசாம்பலில் சுட்டுப் பிளந்து உட்சதையை எடுத்துப் புதுச்சட்டியிற் போட்டு ஒரு பழப்பாக்களவு பனங்கட்டியும், 3 கடுக்காயின் பொடிபண்ணின தோலும் ஒன்றாகச் சேர்த்துப் பிசைந்து வெயிலில் வைக்கச் சலம் தெளிந்து வடியும். அதில் 1 சங்கு நிறையவிட்டு 3 திற்பலியை வெதுப்பித் தூள்செய்து அதிற்கலந்து பருக்கவும். நன்றாக வயிறு விடும். சலமும் சுத்தமாகக் கழியும். செங்கரப்பன் சுகமாகிவிடும். இன்னும் ஷை கற்றாழஞ்சதையைச் சுடாமல் எடுத்து ஏழுமுறை தண்ணீரில் கழுவி கடுக்காய்த்தோல் பொடி சிறுநீர் போட்டுப் பிசைந்து சீலையில் வடித்தெடுத்து அந்தநீரால் நாக்கவியலுக்குப் பூசி வழிக்கலாம். தொண்டைக் கம்மலும் எடுபடும். வழித்தபிறகு தொண்டையவியலை மாற்றும் நோக்கமாகச் சிறிது உள்ளுக்கும் புகட்டலாம். இன்னும் அநேகவித ஔஷதங்களுண்டு. அவற்றையெல்லாம் கூறப்போனால் 'வைத்திய'னே இடங்கொடானாகையாலும் இன்னும் பல்வேறு நோய்களைப்பற்றி அறிந்து சிகிச்சைபுரிய வேண்டியிருப்பதாலும் காலக்கிரமத்தில் அற்பசொற்பமாக இதழ்தோறும் வெளிப்படுத்துவோம். (தொடரும்.

"பித்தம் கொடாது சத்தி எடாது; மந்தம் இராது சுரம் வராது"

நோய்களின் வகையும் தொகையும்

— வைத்தியர் ஏ. எஸ். இராசையா —

மக்களை வருத்தும் நோய்கள் 4448 என நம் மூதாதையராஞ் சித்தர்களாய்ந்து கணக்கிட்டிருக்கிறார்கள். இவைகளிற் சில எத்தன்மையன என இதுகாறும் எம்மால் அறியப்படாதிருக்கின்றன. அறியாத அவைகளின் பெயர்கள் பின்னாற்காணும் அட்டவணையில் அடையாளத்தோடு சேர்க்கப்பெற்றிருக்கிறது. பண்டிதர்களிலநேகர் அந்நோய்கள் எத்தகைய குணமுடையவைகளென அறியாமலிரார்கள். அன்னார் அந்நோய்களின் குணங்களை ஏனைய வைத்தியர்களுக்கும் பொதுஜனங்களுக்கும் பிரயோசனமாகும்படி உலோகோபகாரமாக இப்பத்திரிகை வாயிலாய் வெளியிடும்படி வேண்டுகின்றேன்.

இன்னும் இவ்வட்டவணையிற் பிழையுளதேல் அதனையும் அறிஞர்கள் தக்க ஆதாரத்தோடு அறிவிற்பார்களாயின் அப்பிழைகளை நன்றியறிதலோடு திருத்திக்கொள்ளலாகும்.

பெயர் வகை	தொகை	பெயர் வகை	தொகை
கதிர்வீச்சு	3	பிளவை	10
சிரசில் வீக்கம்	5	கெண்டை	10
உருவசியம்*	5	கழல்நோய்	10
திட்டை*	5	திமிர்நோய்	10
சத்தி	5	காதுநோய்	10
நீராம்பல்	5	விக்கல்	10
அரோசிகம்	5	மூக்கறுப்பன்	10
இசிவு	6	படுவன்	11
கிருமி	6	கட்டி	12
நடுக்கல்	6	உதிரநோய்	16
க்ஷயம்	7	விஷபாகம்(உடம்புவீக்கம்)	16
மகோதரம்	7	குட்டம்	18
மூர்ச்சை	7	விற்புருதி	18
குமிளிநோய்	7	மாலைக்கண்	20
குன்மம்	8	முதிர்வுநோய்	20
பெருவயிறு	8	மேகம்	21
பீலிகை	8	கிருணி	25
மூலம்	9	அதிசாரம்	25
பாண்டு	10	முட்டுநோய்	30
பீனிசம்	10	வேலிநோய்*	46

* விபரம் கோரப்படும் நோய்கள்

(முன் தொடர்ச்சி)

மகோதரமும் அதன் சிகிச்சையும்

வைத்தியர் அ. வி. இராசரத்தினம்

16. மேற்கவிசை மகோதரம் :— மேல் வயிற்றில் தட்டையாகக் கட்டி காணல் தசை நரம்பு இவை சுருங்குதல், வாய் குமட்டல், மாரடைப்பு, பெருமூச்சுண்டாதல், உணவில் வெறுப்பு, உவாந்தி ஆகிய இக்குணங்களுண்டாம்.

17. பக்கக் கவிசை மகோதரம் :— விலாப்பக்கத்தில் கட்டி தோன்றல், அடிவயிறு சுருங்கிக் குமுறுதல், தாகம், எரிவு, வயிறு பொருமல், இரைப்பையில் புளிப்பேறி இடையிடையே நெஞ்செரிவு காணல், மலசலக் குறைவு ஆகிய இவைகளுண்டாம்.

18. பழுக் கவிசை மகோதரம் :— விலாவினடிப்பாகமாகிய பழுவெலும்பை அண்டிமுளைபோன்ற கட்டி உண்டாதல். வயிறு கனத்துப் பொருமல், மேல் மூச்சு, தேக உளைவு, உறக்கம், உணவில் வெறுப்பு, வாய்வு அதிகரித்து வயிறு ஊதல் மூச்சுத் திணறலுண்டாம்.

17. பெருவயிற்று மகோதரம்:- தேகத்திலுள்ள ஏனைய பாகங்கள் மெலிந்து வயிற்றில் கல்லைப்போன்ற கடினமான வீக்கம்,

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

பெயர் வகை	தொகை	பெயர் வகை	தொகை
பித்தம்	48	எழுவையொடுகழலை	95
கிரந்தி	48	சிலேற்பனம்	96
சிலந்தி	60	நேத்திரநோய்	96
சுரம்	64	துடிநோய்	100
கடிவிஷம் (பெருவிடம்)	66	பிள்ளைநோய்	100
நாக்கு பல் நோய்	75	சூலை	200
சன்னி	76	பிறநீர்க்கோவை	200
கல்லடைப்பு	80	தனுர்வாய்வு	300
வாதம்	84	கடிவிஷம் (சிறுவிடம்)	500
பொறிகரப்பன்	90	குத்துவெட்டு	700
வாய்வு	90	பொறிவிஷம்	800
		மொத்தம்	4448

இவ்விபரங்கள் அகஸ்தியர் இரத்தினச்சுருக்கம் 500, அகஸ்தியர் குருநாடி 235, பரராசசேகரம் சிரரோக நிதானம் முதலிய நூல்களிலும், இன்னும் பல நூல்களிலும் இருந்து திரட்டப் பெற்றவை.

✲

வயிற்றிலுள்ள நரம்புகள் புடைத்துக்காணல், மலச்சிக்கல், வயிற்றில் மந்தம், மயக்கம், கிணற்றில் ஊற்றைப்போல் வயிற்றில் நீர் சுரத்தல் ஆகிய இக்குணங்களுண்டாம்.

20. சூல் மகோதரம்:- பெண்களுக்கு கருப்பத்தைப்போல வயிற்றில் தோன்றி அதிகவேதனையுண்டுபண்ணும். அப்பொழுது தேகஅழற்சி, உணவில் வெறுப்பு, குளிர்ந்த சலத்தில் விருப்பு, கால் கை சந்துகளில் வீக்கம், அற்பசுரம், அருவருப்பு, சரீர உளைவு, ஆகிய இக்குணங்களுண்டாம்.

21. வல்லை மகோதரம்:- (வல்லை ஆப்பு) உந்தியின் நடுவில் உள்ளங்கையளவு கட்டி ஆப்பிட்டாற்போல அசையாதிருத்தல் உணவு வெறுப்பு, வெந்நீரில் விருப்பு, கால் கை அசதி ஆகிய இக்குணங்களுண்டாம்.

22. விஷ மகோதரம்:- பீசம் உட்பட தேகம் வீங்குதல், தேகம் வெளுத்தல், சில அவயவங்கள் மெலிந்து போதல், பீசம் தளர்ந்து தொங்கல், கடுகடுப்பான வார்த்தையாடல், திமிர் நடுக்கம், ஆகிய குணங்களுண்டாம்.

23. பாண்டு மகோதரம்:- முகம் மாறுபட்டு வீங்கல், மேல் மூச்சு, இரத்தக் குறைவு, மயிர்கள் செந்நிறமாக மாறுதல், தேகம் வறண்டு பின் வீங்குதல், அடிவயிறும் புறங் கால்களும் வீங்குதல், இரத்தக் குறைவு, நடக்கப் பெலனற்றுப்போதல் ஆகிய குணங்களுண்டாம்.

24. சோபை மகோதரம்:- பீசம், கை, காலிவைகளில் வீக்கம், அடிவயிறாதல், இருமல், தாகம், மேல் மூச்சு, விக்கல், மலசலங் குறைந்து போதல், தேகக் குளிர்ச்சியாகிய விக்குணங்களுண்டாம்.

25. காமாலை மகோதரம்:- தேகம் வறளல், மார்பு முக மிவைகளில் வியர்வையுண்டாதல், உடல் நடுக்கம், தேகக் குளிச்சி புறங்காலில் வீக்கம், அடிவயிறு சுருங்கி வற்றுதல், கோழையுண்டாதல், சுரம், தலைவலி, நித்திரையின்மை, தாகம், கிலேசம் இவையுண்டாம்.

26. குன்ம மகோதரம்:- உண்டவுணவு செரியாமல் வயிறழுதல், உவாந்தி, பேதி, ஈரற் பக்கத்தில் வலி, விலா, இடுப்பு இவைகளில் வீக்கம், கோசலம் போல் சிறு நீர் இறங்கல், ஆகிய இக் குணங்களுண்டாம். இது குன்ம ரோகத்தைக் காரணமாகக் கொண்டு பிறந்ததால் இப் பெயர் பெற்றது.

27. உதர மகோதரம்:- வயிற்றில் வாய்வு சேரல், சிறு நீர் கடுத்து அடிக்கடி போதல், கண் சிவந்து காந்தல், பசியின்மை, மலச்சிக்கு, வயிறு கனத்தல், வயிற்றிலிருந்து மார்புவரை வீக்க

முண்டாதல் ஆகிய விக்குணங்களுண்டாம். வயிற்றுப் பாகமே பிரதானமாக வீங்குவதால் உதர மகோதரமெனப் பெயர் பெற்றது.

28. கூர்ம மகோதரம்:- (கூர்மம் = ஆமை) வயிற்றில் ஆமையைப்போல் கட்டியுண்டாதல், தேக வறட்சி, கண் காந்தல், இருமல், இளைப்பு, உணவில் வெறுப்பு, வயிறு இரைந்து ஊதல், கண் சிவத்தல், பெலவீனம் ஆகிய இக் குணங்களுண்டாம்.

29 பிலீக மகோதரம்:- (பிலீகம் = மண்ணீரல்) மலசலம் சரியாகப்போதல், வாய்வு கீழ்நோக்குதலால் கீழ்ப் பாரிசத்தில் சிறிது வீக்கமும், உணவிலதிக விருப்பமுமுண்டாம்.

30. சுர மகோதரம்:- கணைக்கால் புறங்கால் இவைகளில் வீக்கங் கண்டு பின் அவ் வீக்கமானது மார்பு பிடரிவரை செல்லுதல், வயிற்றில் பொருமலோடு வீக்கங் காணுதல், சுரம், அசதி, தேக எரிவு, காற்றின்மேல் விருப்பு, ஆகிய இக் குணங்களுண்டாம்.

31. சல மகோதரம்:- தேகமெல்லாம் நீர் கோத்துக் கனத்தல், நிறம் மஞ்சணித்தல், வயிற்றுப்பிசம், தேக எரிச்சல், ஆண் குறிச் சோர்வு, முதுகுவலித்து வீங்குதலாகிய இக் குணங்களுண்டாம்.

32. மாமிச மகோதரம்:- அடிவயிற்றில் மாமிசம் வளர்ந்து கல்லைப்போலிருத்தல், உடம்பு வற்றல், தாகம், வாய் குழறல், வாய்வு மேல் நோக்கல், மலசலத்தில் மாமிசம் போன்ற மணமுண்டாதல் ஆகிய இக் குணங்களுண்டாம்.

குறிப்பு- மேற்கூறிய பாண்டு மகோதரம், சோபை மகோதரம், காமாலை மகோதரம், ஆகிய மூன்றும் தத்தமக்கு முதற்காரணமாயுள்ள ரோகத்தினின்றும் பிறத்தலால் அவ்வவற்றின் பெயரைக் காரணமாகக் கொண்டன.

முன் கூறப்பட்ட சூல் மகோதரம் கருப்பாசயத்தின் வெளிப்புறத்திலுள்ள சவ்வில் நீர் கொள்ளுவதினின்றும் உண்டாகின்றது.

சாத்திய அசாத்தியம்- வாத, பித்த மகோதரங்கள்; வழுவை, வெப்புப்பாவை மகோதரம், மேற்கவிசை மகோதரம், சூல் மகோதரம், விஷ மகோதரம், வல்லை மகோதரம், பாண்டு மகோதரம், சோபை மகோதரம், காமாலை மகோதரம், உதர மகோதரம், கூர்ம மகோதரம் ஆகிய இப்பதினாறும் சாத்தியமென்பதும், இவையொழிந்த ஏனைய பதினாறும் அசாத்தியமென்பதும் சாஸ்திர சம்மதம்.

சிகிச்சை

தோஷங்கள் அமிதமாக விருத்தியாய் விடுவதாலும், நிண நீர்க் குழாய்கள் அடைபடுவதாலும் உதரத்தில் ரோகங்கள் உற்பத்தியாகின்றன. ஆகையால் இவ்வியாதிகளில் எப்பொழுதுமே விரேசநம் செய்விக்க வேண்டும். உதரத்தில் அதிக வறட்சி ஏற்பட்டிருக்குங்காலத்தில் பிணியாளி ஒரு மாசம் அல்லது இரண்டு மாசம் வரையில் ஆமணக்கெண்ணெயைப் பசு மூத்திரத்தோடாவது அல்லது பசுப் பாலுடனாவது கலந்து பருகிவரலாம். பசுப் பாலையும் அன்னத்தையும் கலந்து பத்திய போசனமாகக் கொள்ளலாம். அதிகமான விரேசன சிகிச்சையினால் பிணியாளி பலவீனப்பட்டுச் சோர்வடையும்போது இடையிடையே கழுதைப்பாலையாவது, பசுப் பாலையாவது, ஆட்டுப் பாலையாவது உட்கொள்ளக் கொடுக்கலாம். முற் கூறியபடி ஆமணக்கெண்ணெய்ப் பிரயோகத்தால் விரேசநமாய் வயிறு நன்கு வாடியதும் வியர்வையைப் பிறப்பிக்கும் சிகிச்சையைச் செய்து பின் வயிற்றை சீலையினால் சுற்றிக் கட்டவும். இவ்விதம் செய்தால் மறுபடியும் வாயுவானது வயிற்றை ஊதச் செய்யாது. நன்கு விரேசனமானபின் மறுபடி வயிறு ஊதிவிட்டாலும், வாயு தடைப்பட்டு வயிற்றுப் பொருமல் ஏற்பட்டாலும், கஷாயங்களாலும், பசுமூத்திரம், காரங்கள் சேர்ந்த திரவங்களால் பீச்சாங் குழல் வைக்கலாம். இந்த ரோகத்தில் கீழ்க்காணும் மருந்துகள் மிகவும் உபயோகமானவை.

1. சலமஞ்சரி:- சுங்குப் பொடி, சாத்திரபேதி, சுத்தி செய்த காந்தம், சிலாசத்து, கல்நார், பொரித்த வெண்காரம், அயம், தெந்தி, பொரித்த படிகாரம், வெடியுப்பு, இவை வகை கழ - 1 இவற்றைக் கல்வத்திலிட்டு நன்கு அரைக்க மெழுகு பதமாக வரும். பின் குகையிலிட்டு அனலில் வைத்து உருகியவுடன் ஆற்றி எடுத்து பணவிடை வீதம் இளநீர், தேசிப்புளி, வெந்நீர், கையான் சாறு, முதலியவைகளிற் கொடுக்கவும். இது நல்ல சல விரேசனியாகும்.

2. தும்மட்டிக்காய் மெழுகு:- 3 படி ஆவின் நீரை பழகிய பாண்டத்துள் விட்டு அதில் இந்துப்பு, வளையலுப்பு, சோற்றுப்பு, வெடியுப்பு, கல்லுப்பு வகைக்கு $7\frac{1}{2}$ கழஞ்சு வீதம் பொடித்துப் போட்டு அடுப்பில் ஏற்றி குழம்புப்பதத்தில் சுண்டக்காச்சி சேதப்படாமல் வழித்து கல்வத்திலிட்டு, 50 பேய்த் தும்மட்டிக் காயை இடித்துப் பிழிந்த சாற்றை கொஞ்சங் கொஞ்சமாக விட்டு சாறு முடியும்வரை அரைத்து மெழுகு பதத்தில் எடுத்து பத்திரப் படுத்துக. வேளைக்கு சுண்டங்காய்ப் பிரமாணம் தினம் 1 வேளை காலையிற் கொடுத்து வரச் சிறிது விரேசனமாகும். பின் நவமணிச் செந்தூரம், இராமபாண செந்தூரம், ஆறுமுக செந்தூரம், அயகாந்த செந்தூரம் முதலியவற்றைக் கொடுத்தல் நலம்.

காய்ச்சலின் வரலாறும் மருந்தும் III

— வைத்தியர் நா. பெ. —

அம்மை, கோப்புளிப்பான், சின்னமுத்து முதலிய சுரங்களுக்கு மருந்து-

அம்மை முதலிய சுரங்களைத் தூபங்கள், இயந்திரங்கள், பார்வைகள், பூஜைகள் முதலிய சிகிச்சைகளால் சாந்தப்படுத்த வேண்டியது.

இவற்றிற்குக் குடிநீர்:- மஞ்சள், சீரகம், சுக்கு, மல்லி, வேப்பிலை, பிற்படாகம், ஏலக்காய், சிறுகாஞ்சோன்றி, ஆடாதோடை ஈர்க்கு, நொச்சி, சீந்திற்கொடி, வாய்விளங்கம், துளசி, வால்மிளகு, லவங்கபத்திரி, கறுவாப்பட்டை, முக்காவேளை, நிலவேம்பு, வில்வவைரம் இவைகளைச் சமஎடை எடுத்துத் தண்ணீர்விட்டவித்துப் பிழிந்து வடித்து உட்கொள்ளத் தீரும்.

(வேறு) இலுப்பைப்பூ, மஞ்சிட்டி, வெட்டிவேர், கொத்தமல்லி, அதிவிடயம், கோரைக்கிழங்கு, நெல்லிப்பருப்பு, சீந்திற்கொடி இவைகளைச் சமஎடை எடுத்து இடித்துத் தூளாக்கி நீர்விட்டு எட்டிலொன்றாகச் சுண்டக் காய்ச்சிக் கொடுக்கவும்.

அசீரண சுர லக்ஷணம்

சுரம் காணல், கொட்டாவி, விக்கல், பசி மந்தம், முழங்கால் நோ, புளிததேப்பம் என்பவையாம்.

குடிநீர்:- உள்ளி, முருங்கைக்கூர், மிளகு, சுக்கு, பெருங்காயம், இந்துப்பு இவை சமஎடை எடுத்து கஷாயம்செய்து கொடுக்கவும்.

விடாமுயற்சியினால் வரும் சுரம்

அதிக நடையினாலும், பயிரிடுதல் முதலிய முயற்சியினாலும் இது உண்டாகும். முதல்முதல் வாய்வானது நீக்கமற நிறைந்து அதிகரித்து இரத்தத்தை வேதனையுடன் கெடுத்து வாய் குளறல், தேகநிறக்கெடுதி, சர்வாங்கநோ எனும் குணங்களுண்டாகும்,

குடிநீர்:- சுக்கு, திற்பலி, மிளகு, கடுக்காய், பறங்கிக்கிழங்கு, பிரப்பங்கிழங்கு, நிலவேம்பு, சித்திரமூலம், சிற்றமட்டி, பேரமட்டி இவைகளைச் சமஎடையாய் இடித்து ஒருபடி ஜலம் விட்டு நாலில் ஒன்றாக்கி வடித்து உட்கொள்ளவும். கைகண்டது.

சுக்கில தாது சுர லக்ஷணம்

கண்களில் இருள் கம்மல். மர்மஸ்தானமாகிய புருவம்; உச்சி, கழுத்து, மார்பு, தொப்பூழ், உதடு, பீஜம், முழங்கால், கணுக்கால், இடுப்பு, காலின் பெருவிரல், சுண்டுவிரல், தோள் என்னுமிடங்களில் நோதல்; ஆண்குறி சுருங்கல், இந்திரியச் சீரணம், அதிக நித்திரை, பிரலாபம், ஞாபக மறதி, அவையவங்கள் கனத்தல்.

ஈனத்தொனி, தலை கிறுகிறுத்தல், பல்நோ, ஏப்பம், விக்கல், அசீரணம், அரோசகம், பேதி, இருமல், சுவாசகாசம், சர்வாங்கமும் வெளிறலுடன் வீக்கம், தடித்தல், வாந்தி, நடுக்கம், நித்திரைப்பங்கம், சோகை, அன்னத்துவேஷம், பசிமந்தம், வாய் தித்திப்பு, முகத்தில்வியர்வை, கைகால்குளிர்ச்சி என்னுங்குணங்கள் காணும்.

சுக்கில தாது சுரத்திற்குக் குடிநீர்:- வெள்ளைச் சாறணைவேர், எருக்கம்வேர், சிற்றமட்டிவேர், நாய்வேளைவேர் கத்தரிவேர், கொள்ளுச் செடிவேர், கண்டங்கத்தரிவேர், திப்பிலிமூலம், சுக்கு இவைகளைச் சமஎடையெடுத்திடித்து ஒரு படி நீர்விட்டு அரைக்காற்படியாகச் சுண்டக்காய்ச்சி மூன்றுவிரற்கடை திப்பிலிச்சூரணம் போட்டுக் காலை மாலை 12 நாள் உட்கொள்ளத் தீரும்.

அதிசாரசுர லக்ஷணம்

சுரம், அதிதாகம், மார்புநோய், அருசி, பேதி, சீதம் அல்லது இரத்தம் வீழல் என்பவையாம்.

குடிநீர்:- கொத்தமல்லி, சுக்கு, கோரைக்கிழங்கு, வில்வம்பிஞ்சு, சீந்திற்தண்டு, மாம்பித்து இவைகளைச் சமஎடையாய் எடுத்து ஒரு படி நீர்விட்டுச் சுண்டக் காய்ச்சி உட்கொள்ள அதிசாரசுரம், விஷம், மூர்ச்சை தீரும்.

இரத்த அதிசாரசுர லக்ஷணம்

இரத்தக் கழிச்சல், தாகம், தீவிரமான சுரம், தேகமாதியந்தம் நோ முதலியனவாம்.

இதற்கு மருந்து:- லிங்கம், கெந்தகம், வெங்காரம், இவை ஊமத்தம் விதை சுத்திசெய்து மிளகு, திப்பிலி இவை சமஎடை எடுத்து கஞ்சாஇலைச் சாற்றால் ஒருஜாமம் அரைத்துக்கொண்டு கடலையளவு மாத்திரைசெய்து விசேஷ அனுபானங்களில் பிரயோகிக்க அக்கினி மந்தம், தீவிரசாரம், சகல அதிசாரங்கள், கிராணிகள் தீரும்.

வைத்திய அன்பர்கட்கு

1. வைத்தியனில் வெளியிடும்படி அனுப்பப்படும் கட்டுரைகள் முன் இதழ்களில் இதேகருத்தை விளக்கி வெளிவந்த கட்டுரைகளைச் சார்ந்தனவாயிருந்தால் வெளியிடப்படாது விடப்படலாம். ஆகவே கட்டுரை கூடுமானவரை சிறிதாயும், இதற்குமுன் வைத்தியனில் வெளிவராத விஷயமாயும் இருத்தல் நலம்.

2. பல டக்டர்களாலும் கைவிடப்பட்ட பின்பு நோயாளரைத் தாம் குணப்படுத்தியதை வைத்தியனில் வெளியாக்கும்படி சில வைத்தியர்கள் கோருகின்றனர். இதற்குப் போதிய எழுத்துமூலம் கிடைத்த விபரங்களையும் தாம் கையாண்ட முறைகளையும் விபரமாகக் காட்டினால் மட்டும் பிரசுரிக்கப்பெறும். — ஆசிரியர்

தொண்டைக் கிரந்தி (tonsil), நாசிக்கிரந்தி (adenoids) களின் வீக்கமும் மருந்தும் II.

இரைக்குழாய் மூச்சுக்குழாய்களுக்குள் (மேல்) வாயால் கிருமி புகுந்து தீங்கு விளைக்காமற் காப்பது (tonsil, pharyngeal tonsil எனும்) தொண்டைக் கிரந்தி நாசிக் கிரந்திகள் என்றும்; சிறு குடலுள் மலவாசலாகிய கீழ்வாயால் கிருமி புகுந்து தீங்கு விளையாமற் காப்பது (abdominal tonsil எனும்) குடல்வால் (appendix) என்றும் மேல்நாட்டு மருத்துவர் கூறுவர். ஆனல் அநேகர் குடல்வாலால் உடம்புக்கு யாதொரு பயனுமில்லை என்று சாதித்து, யாதாமொரு நோய்க்கு வயிறு கீறிச் சத்திர சிகிச்சை செய்ய நேரிட்டால் சந்தர்ப்பத்தை நழுவவிடாது குடல்வாலைத் தேடிப்பிடித்து வெட்டி நீக்கிவிடுங்கள். இப்படியே இயற்கைப் பாதுகாப்பாயிருக்கும் தொண்டைக்கிரந்தி நாசிக்கிரந்திகளை நோய் பிடித்தவுடன் வெட்டி நீக்கிவிட வேண்டுமென்றும்; இருந்தபடி மருந்து செய்வதன்றி ஒருபோதும் அதை வெட்டி நீக்கக்கூடாதென்றும்; இரு கட்சியாக இன்றைக்கும் மேனாட்டுச் சத்திரநிபுணர் வாதாடுகின்றனர். எமது வைத்திய நிபுணர் இக் கிரந்தி நோய்களுக்குச் சத்திர சிகிச்சை புரிவதை ஆதரிக்கவில்லை. உள் மருந்து வெளிப் பூச்சுகளாலும் தலைக்கு எண்ணெய்களாலுமே சித்திகரமாய்ச் சிகிச்சைசெய்து வந்திருக்கிறார்கள்.

ஷை கிரந்தி நோய்களுக்கு **1. வாய் கொப்பளிக்க:** வெங்காரம், நவாச்சாரம், சீனக்காரம், கறிஉப்பு, சோடாஉப்பு (sodium bicarbonate முதலிய ஒன்றின் கரையமும், **2. உள்ளுக்குப் பூச:** 7 தரம் திருப்பிக் காய்ச்சிய மடக்குக் கரிசாலைத் தைலம்; கையாந்தகரைச் சாற்றிற் குழைத்த கடுக்காய்த்தூள்; தேனிற் குழைத்த மாயாக்காய்த்தூள் அல்லது நெய்யிற் குழைத்த மாயாக்காய் சுட்ட சாம்பல் முதலியனவும்; **3. வீக்கத்தில் அடைவதற்கு:** வேப்பம் நெய்ச்சீலை, சௌந்தரியார் கிருதச்சீலை சென்னகரம்பழ நெய்ச்சீலை முதலியனவும்; **4. முகர்வதற்கு:** அகில் கட்டைப் புகை அல்லது அகில் அத்தர் (creosote) சாம்பிராணித் தைலம் போல்வனவற்றை கொதிநீரில் விட்டு அதனின்றும் எழுகின்ற வேறு முதலியனவும்; **5. வெளிப்பூச்சுக்கு:** வேப்பம் நெய், சஞ்சீவித் தைலம் முதலியனவும்; **6. வீக்கப் பெருக்கத்தைக் குறைக்க:** பாதங்களுக்கு கடுகு அரைத்துக் கலந்த வெந்நீரில் 'பாதக் குளிப்பு', 'அட்டை விடல்' முதலியனவும் சில வெளிப்பிரயோக முறைகளாம்.

உள்மருந்துகளாவன:- வேப்பம்நெய்யை காலையில் 3 நாளைக்கு ஒவ்வொரு தேய்க்கரண்டியளவு விழுங்குவது; சௌந்தரியார் கிருதம் அல்லது அகத்தியர் **1500** இல் உள்ள அல்லது வேறு நூலாரின் பறங்கிப் பட்டைச் சூரணம் அல்லது இரசாயனம்; பராசசேகரம்

பகரும் சென்னகரம்பழ நெய்; இன்னும் ஷெ யாரின் சிரரோக நிதானத்தில் நாசிரோகம் கண்டரோகம் நாக்குரோகத்தின் கீழ்க் காணும் பற்பல சிகிச்சை முறைகளும் ஏற்றவையாகும். தலைக்கு வைப்பதற்கு 'தேரையர் தைல வர்க்கத்திற்' காணும் சர்வதிக்த தைலம், கீழ்க்காணும் எண்ணெய்வகை போன்றவை சுகந்தரும்.

பிரயோகித்துச் சித்திகண்ட சிலமுறைகள்

1. பாமச்சீலை: சுத்தித்த துத்தம் துரிசு வறுத்த இந்துப்பு இவை சம நிறை எடுத்து, பழைய தேன் எருக்கம்பால் மருக்காரைக் காய்ச்சாறு இவை சம அளவு விட்டு தனித்தனி ஒரு மணித்தியால வீதம் அரைத்து மெல்லிய துணியிற் பூசி உலர்த்தி வைத்துக் கொள்ளவும். தேவையானபோது வெந்நீரில் நனைத்து கொடுப்பில் அடக்கி உமிழ்நீரை விழுங்கிவர மிடற்றுநோ சளிக்கட்டு தொண் டைவீக்கம் கண்டக்கரப்பன் தொண்டைக்கிரந்திநோய் தீரும்.

2 கரிசாலைத் தைலம்: எண்ணெய் கையாந்தகரைச்சாறு வகைக்கு 1 படி; பிள்ளைக் கற்றாளை நெல்லிக்காய் இவை சாறு வகைக்கு ¼ படி; கஸ்தூரி மஞ்சள் சாதிக்காய், அதிமதுரம் வகைக்கு 1 பலம்; பசுப்பாலால் சரக்கை அரைத்து எண்ணெய் சாறுகளிற் கரைத்து மெழுகு பதமாக வடித்து முழுக, கண்நோய் நாசிநோய், கள நோய் செவிநோய் தலைநோய் பித்தம் உஷ்ணம் பீனிசம் தீரும்.

3. பெரிய பறங்கிக்கிழங்குச் சூரணம்: பறங்கிக்கிழங்கு ½ றாத்தல் சுக்கு மிளகு வகைக்கு 8 களஞ்சு; இரசம் கெந்தகம் வகை 4 களஞ்சு; சாதிலிங்கம் அரிதாரம் மனோசிலை துத்தம் துரிசு ஊசிக் காந்தம் சீனக்காரம் பொரிகாரம் இரசகற்பூரம் பொன்நிமிளை வெள்ளிநிமிளை சாத்திரவேதி அயப்பொடி கிட்டப்பொடி அவின் குங்குமப்பூ கோரோசனை சிற்றரத்தை பேரரத்தை திற்பலிமூலம் வெண்கோட்டம் சாதிக்காய் சாதிப்பத்திரி சதகுப்பை ஓமம் ஏலக் காயின் அரிசி இலவங்கப்பட்டை கராம்பு செண்பகப்பூ அதிவிடயம் வெந்தையம் கொத்தமல்லி அதிமதுரம் வால்மிளகு வசுவாசி கடுகு ரோகணி கறுவாப்பட்டை பாற்பெருங்காயம் கடுகு குருசாணி வெளுத்தற்பிசின் உள்ளி இலவங்கப்பத்திரி சிறுதேக்கு நாகம்பூ கருஞ்சீரகம் வாய்விளங்கம் வகைக்கு 1 களஞ்சு; திற்பலி நற்சீரகம் நத்தைச்சூரிவேர் கொடிவேலிவேர் இயங்கம்வேர் சீந்தில் கிழங்கு வகைக்கு 4 களஞ்சு; வைரச் சரக்குகளைச் சுத்தித்ததாக எடுத்து அரைத்துக்கொண்டு மற்றவைகளை வெயிலிற் காயவைத்து இடித்து வாசனைத் திரவியங்களைக் கடைசியில் சேர்த்து எல்லாம் கலந்து 'மல்' துணியில் அரித்து எடுத்து வெருகடிப் பிரமாணம் காலை மாலை வெறு வயிற்றில் தேன் அல்லது வெந்நீரில் உண்டுவர வாதம் 80; பித்தம் 40, சிலேற்பனம் 96, வாயு 64, மேகம் 21,

குன்மம் 8, குஷ்டம் 18, கண்ணோய் 96, நீரிழிவு கண்டக்கிரந்தி, கண்டத்துக்கு மேற்பட்டநோய்கள் முதலிய பலகொடிய நோய்கள் தீரும். சமயோசிதமாகப் பத்தியம் வைக்கவும். (மலசுத்தி குறைந்தவர்கள் வெந்நீரிலும், மற்றவர்கள் தேனிலும் உண்ணவேண்டும்.)

4. சென்னகரம்பழத் தெண்ணெய்: கோழியவரை உத்தமாகாணி சிறுகீரை தூதுவேளை நத்தைச்சூரி செங்கத்தாரி இவைவேர்; மாம்பட்டை அத்திப்பட்டை வெங்காயம் ஒவ்வோர் பலம். உள்ளிச்சாறு வெங்காயச்சாறு சிற்றாமணக்கு நெய் ஒவ்வோர் படி; சாதிக்காய் சாதிபத்திரி கராம்பு வசம்பு குருசாணி கடுக்காய்த்தோல் மாயாக்காய் திற்பலி கடுகுரோகிணி ஏலக்காயின் அரிசி ஓமம் அதிமதுரம் வெண்கோட்டம் செஞ்சந்தனம் கொத்தமல்லி தான்றிக்காய் சென்னகரம்பழம் பீநாறிப்பட்டை செவ்வள்ளி கோரோசனை ஆனைத்திற்பலி நற்சீரகம் கருஞ்சீரகம் ஒவ்வோர் களஞ்சு. ஆமணக்கு நெய்யிற் சாறுகளைக் கலந்து வெங்காயம் பட்டைத்தூள் வேர்த்தூள்களை மட்டும் அதிற்போட்டு மிருதுவாய் எரித்துக் காய்ச்சி பொன்னிறமானபின் சரக்குத்தூளைப்போட்டுக் கொதி அடங்க இறக்கவும். பிறகும் 3 நாள் வெய்யிலில் வைத்தெடுத்து உள்ளுக்குக் காசெடை தின்று கொடுப்பில் அடைந்து, வெளியிலும் பூசி, தலைக்கும் வைக்க செங்கரப்பன் கொள்ளிக்கரப்பன் குழிகரப்பன் கிரந்திக் கரப்பன் தொண்டைக்கரப்பன் கருங்குட்டம் வெண்குட்டம் வாயவியல் கெந்ததாலு வாய்க்கிரந்தி வரட்சிக்கணை வரட்சூலை கண்டக்கிரந்தி சிலேற்பனக் கிரந்திகள் தீரும். கெற்பணி சாப்பிட்டு வந்தால் பின்பு சிசுவுக்கும் புகட்டவேண்டும்.

வைத்தியர், க. வே. வின் சில இலகு முறைகள்.

மிடற்றுநோ தொண்டைக் கரப்பன் இவைகளுக்கு நெய்: இருசீரகம் ஓமம் திற்பலி வசம்பு மஞ்சள் கடுக்காய் பன்றிமுள் சுட்டசாம்பல் புனலைப்பழம் குளஅடப்பங்கொட்டை ஆடுதின்னாப் பாலைவேர் கறிஉப்பு இவை தூள்செய்து; நல்லெண்ணெயும் வேப்பெண்ணெயும் சமனாக எடுத்துக் கொதிப்பித்து ஷ தூளைப் போட்டுக் கிளறி மெல்லிய துணியைத் துண்டுகளாகக் கிழித்துப்போட்டு எடுத்துக் கொடுப்பில் அடைந்துவரத் தீரும்.

வேறு முறை: குள அடப்பங்கொட்டையையும் உப்பையும் அரைத்துச் சீலையில் தடவி வேப்பெண்ணெயில் தோய்த்துக் கொடுப்பில் அடைந்து தொண்டையிலும் பூசவும்; இதற்குக் கண்டமாலையும் தீரும். ஷ கொட்டையும் உப்பும் ஆடாதோடையிலைச்சாறு விட்டரைத்துச் சீலையில் தடவிக் கொடுப்பில் அடையலாம்.

இவற்றிற்கு வெளிப்பூச்சு: நத்தை, கொந்தாளங்காய் குள அடம்பங்கொட்டை மஞ்சள் இவை எலுமிச்சம்புளியில் அரைத்து அதி

லேயே போட்டுக் கொதிப்பித்து வெளியில் பூசவும். வீக்கம் வற்று வதுடன் நோவும் தீரும்.

உரும்பராய் வாசியான காலஞ்சென்ற பிரபல இரணவைத்திய நிபுணர் அருணாசலம் அவர்களின் கையாட்சி சவுந்தரியார் கிருதம்.

I. நற்சீரகம் சருஞ்சீரகம் சாதிக்காய் திற்பலி அதிமதுரம் வெளுத்தல்பிசின் செஞ்சந்தனம் ஏலரிசி (ஏலக்காயில் உடன் எடுத்தது) வெந்தையம் வெண்கோட்டம் காய்ச்சுக்கட்டி களிப்பாக்கு இலங்வகப்பட்டை சதகுப்பை கிரந்திதகரம் (கற்தாமரை) வகைக்கு 1 களஞ்சு; இளவறுப்பாக வறுத்து இடித்துத் தூளாக்கி 'மல்'வேட்டியில் அரித்து எடுக்கவும். II. செவ்வரத்தம்பூ படுவன் சிரந்திநாயகன் செவ்வரத்தை செங்கத்தாரி எலுமிச்சை தோடை இவை இலை. III. மலைதாங்கி நன்னாரி காற்றோட்டி சீதேவிசெங்கழுநீர் சிற்றமட்டி வட்டுக்கத்தரி கருஞ்சூரை இவை வேர்; எல்லாம் வகைக்கு 2 களஞ்சு நிறுத்து நிழலில் உலர்த்தி முன்போல் தூள் செய்து அரித்து எடுக்கவும். காற்படி நெய்யில் ஒரு சிறங்கை வெங்காயம் அரிந்து போட்டுக் காய்ச்சி வெங்காயம் சிவந்ததும் இறக்கி உடனே வேர்த்தூள் 1 பலமும் பிறகு சரக்குத்தூள் முழுவதும் மூன்றுவதாக இலைத்தூள் 1 பலமும் நிறுத்துப் போட்டு இடைவிடாமற்கிளறி ஆறினவுடன் வேறொரு பாத்திரத்தில் ஊற்றிவைக்கவும். காலை மாலை வெறுவயிற்றில் ஒரு தேய்க்கரண்டியளவு 1 மண்டலம் இச்சாபத்தியம் காத்துச் சாப்பிட்டுவர சிலந்தி பவுந்திரம் அரையாப்பு உச்சிப்பிளவை வெடிசங்கி, வெடிகரப்பன், (பித்த வெடிப்பு) கற்கரப்பன், செங்கரப்பன், கருங்கரப்பன் அசுகுணிக் கரப்பன் (eczema) தொண்டைக் கரப்பன் (diphtheria) தொண்டைத்திரட்சி, தொண்டைவீக்கம், தொண்டைநோய் கண்டமாலை (scrofula) கணைநோய் (rickets) முதலியன தீரும். (குறிப்பு – வேர்களைக் கூடியவரை பட்டையாக எடுக்கவும் ஒருபலம் = 8களஞ்சு; ஒருமண்டலம் = 40நாள். இச்சாபத்தியமாவது - இச்சை (பெண்போகம்) நீக்கிய பத்தியம். இன்னும் பழப்புளி, புகையிலை, நல்லெண்ணெயையும் நீக்கவும்.

● ○ ○

செனட்டர் W. K. ஜினதாசா காலமானார்

இலங்கை செனட் சபையில் லங்கா சமசமாஜக் கட்சியினால் தெரியப்பட்டவரும், அச்சபையிலுள்ள ஒரே ஒரு சுதேச வைத்தியருமான திரு. W. K. ஜினதாசா நவம்பர் மாதம் 12-ந் திகதி காலமானார். அவர் காலஞ்சென்றதால் உண்டான காலியான இடத்துக்கு ஒரு சுதேச வைத்தியரையே நியமிக்கவேண்டுமென மேற்படி கட்சி வற்புறுத்துவதாகவும் ஆனால் மறுகட்சி அதனை ஆதரிக்க மாட்டாதெனவும் அறியப்படுகிறது.

கெற்பவாயு

— வைத்தியர் ஏ. எஸ். ஆர். —

இது கருப்பையைச் சார்ந்ததோர் வாயு. தசவாயுக்களிலொன்ருகிய அபானனின் ஓர்பிரிவு. பெண்களுக்கே உரித்தானது. தீட்டுவரும்போது நெருநெருப்போடு கூடிய குத்து, அவ்விடத்தே வறுகிப் பிடித்துப் பிசைவதுபோன்ற ஓர் வலிப்பு. நாரிக்கடுப்பு, சிலசமயங்களில் சத்தி, தலைவலி முதலியகுணங்கள் காணப்படும். தீட்டுப் படத்தொடங்கியதும் இவ்வித குணங்கள் நின்றுவிடும். இதனைச் சூதகவாயு, சூசிகாவாயு, சுரோணிதவாயு எனவும் அழைப்பர்.

சூதகம் 28 நாட்களுக்குமுன் வருமாயின் இவ்வேதனைகள் குறைந்து காணும். 28 நாட்களுக்குமேல் எவ்வளவு நாட்கள் கூடச்செல்கின்றதோ அதற்குத் தகுந்தாற்போல வேதனைகளும் கூடிக் காணும்.

விவாகமாகாத பெண்களுக்கு இவ்வித வாயு இருந்தால் அதை மாற்றுதல் ஆகாது. ஆனல் சாந்தமாயிருக்கத்தக்க வழிவகைகளைக் கையாளலாம். அதற்குரிய கண்டிப்பான மருந்துகளைக் கொடுத்து மாற்றினல், ஆனந்தவாயு(*hysteria*) வாயால்இரத்தம்வீழ்தல், தீராத் தலைவலி, பைத்தியத்தன்மை, காக்காய்வலி முதலிய நோய்களைக் கொண்டுவருதல் திண்ணம்.

விவாகமான பின்பே இந்நோயை மாற்றத்தக்க மருந்தளித்தல்வேண்டும். அம்மருந்தினலே இவ்வாயு கண்டிக்கப்பெற்றதும், அப்பெண் கருப்பமுறுவள். பிள்ளை பிறந்தபின் இவ்வாயு காணப்படமாட்டாது. முறையான மருந்து இந்நோய்க்கு அகப்படாவிட்டால் எவ்வளவுகாலஞ் சென்ருலும் அன்னர்க்குக் கெற்பம் உண்டாகாது. கெற்பவாய்வுள்ள பெண்கள் மருந்தினல் நோய் நீங்கப்பெற்றுப் பல பிள்ளைகளைப் பெறினும், பெற்றவீட்டில் வரும் காயாசுவாதம், சன்னி முதலிய நோய்களினலே பெலவீனப்படும்போதும் இவ்வாயுவின் சேட்டை கலந்துகாணும். 45 வயதின்மேல் தீட்டு நின்ற பிற்பாடும் இவ்வாயு தலைவலி, சமியாமை, கொட்டாவி, ஏப்பம், வாதத்தன்மை முதலிய ரோகங்களைத் தூண்டிவிடுவதுமுண்டு. இளம் பெண்களுக்கு வெள்ளைவீழ்தல், கொள்ளிக்கரப்பன் காணுதல், சலக்கடுப்பு முதலிய குணங்கள் காணப்பட்டால் கெற்பவாயு வரப்போகிற

தென்பதற்கு அறிகுறியாகும். அடிக்கடி தீட்டு மறிபட்டு நின்றுவருதல், தீட்டுக்கட்டி வீழ்தல், அதிகந்தூரம் படுதல், தூரம்வந்து முழுகியபின்னரும் துளித்துவாலையாகி நீண்டநாள் நிற்றல், வெள்ளை படுதல், அன்னத்துவேஷம், சமியாமை, மலவரட்சி, இரண்டு மூன்றுநாட்களுக்கொருமுறை மலம்போதல், சிலவேளைகளில் இருந்தாற்போல நாலைந்துமுறை வயிற்றாலே போதல், அடிவயிற்றில் இடதுபக்கத்தில் ஓர்விதநோ, அவ்விடத்திலிருந்து சிறு கொட்டைப்பாக்களவுள்ளதான திரட்சியாய் வாய்வு திரண்டுறுண்டு காணப்படுதல், பின் அத்திரட்சி நடுநெஞ்சு நோக்கி மேலேறி எலுமிச்சங்காயளவினதாய் நெஞ்சடைத்தல், அதிக கொட்டாவி, அதிக ஏவறை, சிலசமயம் இவ்வாயு தலைக்கேறின் பற்களைக் கிட்டிக்கொண்டு மூர்ச்சையாதல் முதலிய குணங்களையும் இவ்வாயு பெற்றிருப்பது சகசம். பூதவாய்வு, வேதாளவாய்வு, அபஸ்மாரம், காக்காய்வலி முதலிய ரோகங்களுக்கும் இக்கெற்பவாய்வே ஓர் காரணமாகும். இவ்வாயு மூளையின் நரம்புகளை வியாபிக்கும்போது ஆடுதல், பாடுதல், பேயாடல், வெகுநாட் பசியிருத்தல், நித்திரையற்றிருத்தல் முதலிய குணங்களையும் கொடுக்கும்.

மேலைத்தேய வைத்தியர்கள் இவ்வாயுவைப்பற்றி இன்னும் சரியாக அறியவில்லை. அவர்கள் சாஸ்திரத்திலே வாயுவைப்பற்றியொன்றும் சொல்லவில்லை. அவர்கள் இவையெல்லாவற்றையும் நரம்புப் பெலவீனம், இதற்கு நல்ல சாப்பாடு கொடுத்துத் திருத்துதல் வேண்டும் என்பார்கள்.

இவ்வாயு நெஞ்சறையில் வியாபித்திருக்கும் நேரத்தில் இரத்தாசயத்தின் அசைவைச் சிறிது பாதிப்பதால் இதனை இரத்தாசயப் பெலவீனம் (*heart weakness*) என்று மேலைத்தேய வைத்தியர்கள் பெரிதும் பயப்படுகிறார்கள். இரத்தாசயப் பெலவீனம் என ஓர் வியாதி இருப்பது மெய்யே அதுவேறு இதுவேறாகும். அதனைத் தமரகவாயு என்றும் உருத்திர வாயுவென்றும் சொல்லப்படும்.

இத்தகைய கெற்பவாயுவை அகற்றி, சந்தான விருத்தியைக் கொடுப்பதற்கு அவரவர்கள் தேகநிலை, சுவாத்திய நிலைக்குத்தக்கதாக அனேகவிதமான குடி தைலங்களும் நடை மருந்துகளும் இருக்கின்றன. இத் தைலங்களிலொன்றைச் சூதகம் வரும்போது வேதனை தொடங்கும்போதே குடித்தல் வேண்டும். ஒருநாளைக்

கொருமுறை சூதகமாயிருக்கும் 3 நாட்களும் குடித்தல் வேண்டும். குடிக்கும் எண்ணெய் ஒருமுறைக்கு ஐந்து ஆறு முறை விரேசிக்கும்படி கூட்டிக் குறைத்துக் குடித்தல் வேண்டும். மருந்து குடிக்கும் நாட்களில் உப்பு, புளி, வாயுப்பதார்த்தம் நீக்கியிருத்தல் வேண்டும். உப்புநீக்கா விட்டால் சலக்கடுப்புக்காணும். புளி நீக்காவிட்டால் உண்டஉணவு நன்குசீரணிக்கமாட்டாது. வாயுப்பதார்த்தம் நீக்காவிட்டால் வயிற்றுப்பொருமல் வயிற்றிரைச்சல் மெல்லியநோ முதலியவைகளேற்படும். மூன்று நாட்களும் எண்ணெய் குடித்துத் தேகசுகமாயிருந்தால் 4ம் நாள் வெந்நீரில் ஸ்நானம் செய்யலாம் நல்ல சுகமில்லாவிடில் 5ம் 6ம் நாட்களில் ஸ்நானத்தை வைத்துக் கொள்ளலாம். இவ்வித சிகிச்சையால் 75 வீதமான பெண்கள் 4ம் மாதம் கருப்போற்பத்தியைப் பெற்றுவிடுவார்கள். மேலும் கெற்பமில்லாதிருப்போர்க்குமதிகாந்த சூரணம், அமிர்தசற்கரை, அமிர்தசற்கரைக் குழம்பு கெற்ப சஞ்சீவிச் சூரணம், மூதண்டலேகியம், சந்தானக் கரணிக்குழம்பு முதலிய மருந்துகளால் கெற்பமுண்டாவதுமன்றிக் கெற்பவாய்வுமகன்று விடும்.

கெற்பவாய்வுக்கு எண்ணெய்

(அனுபவமுறை)

கொம்மட்டிக்காய்ச்சாறு, மரவீளியிலைச்சாறு, எருக்கலைச்சாறு, பாகலிலைச்சாறு, வேப்பிலைச்சாறு, ஆமணக்கெண்ணெய், வேப்பெண்ணெய் வகை படி ¼; குளவிந்த மஞ்சள் களா. 4. மெழுகுபதம் வடித்துத் தீட்டா யிருக்கும்போது மூன்று நாட்களுக்குக் கொடுக்கவும்.

இவ்விதம் மூன்று சூதகத்திற்குக் குடிக்கவேண்டியது. ஒருநேரம் ½ அவுன்ஸ் குடிக்கவேண்டியது. கூட்டியும் குறைத்தும் குடிக்கவும்.

அ. இ. சி. ஆ. வை. சங்கத்துக்கு நன்கொடைப்பணம் உதவிய வைத்தியர்கள்.

T. R. N. அருணாசல தேசிகர், மாதகல்	10-00
S. P அத்தனசியார், சில்லாலை பண்டத்தரிப்பு	10-00
V. விஜயரத்தினம், வளலாய் அச்சுவேலி	10-00
V. தம்பித்துரை ,, ,,	10-00
K. வெற்றிவேலு, கைதடி - நுணுவில் சாவகச்சேரி	5-00

V. குமாரசாமி,	புலோலி கிழக்கு பருத்தித்துறை	5-00
K மயில்வாகனம்,	குணம்விடல்லா வல்வெட்டித்துறை	25-00
K. அருளானந்தம்,	கற்கோவளம் பருத்தித்துறை	5-00
K. குமாரசாமி,	தும்பளை ,,	5-00
சி. சங்கரப்பிள்ளை,	புலோலி கிழக்கு ,,	5-00
இ. கந்தையா	,, ,,	5-00
V. பாலமெனோன்,	வதிரி கரவெட்டி	5-00
S சின்னத்துரை,	புலோலி மேற்கு பருத்தித்துறை	5-00
சி. மூத்ததம்பி,	குடத்தனை	5-00
S. வேலுப்பிள்ளை,	கரவெட்டி கிழக்கு கரவெட்டி	5-00
க. வீரகத்திப்பிள்ளை,	புலோலி மேற்கு பருத்தித்துறை	5-00
வ. கந்தையா,	கரவெட்டி மேற்கு கரவெட்டி	5-00
சோ. திருஞானசம்பந்தர்,	செட்டித்தெரு பருத்தித்துறை	2-00
சி. கந்தையா,	கரவெட்டி கிழக்கு கரவெட்டி	2-00
K. வேலுப்பிள்ளை,	வரணி வடக்கு வரணி	2-00
M. தம்பு,	கொற்றாவத்தை வல்வெட்டித்துறை	3-00
S. அருளம்பலம்,	துன்னாலை தெற்கு கரவெட்டி	2-00
K. வீரகத்திப்பிள்ளை,	கரவெட்டி கிழக்கு கரவெட்டி	2-00
சி. சுப்பிரமணியம்,	கற்கோவளம் பருத்தித்துறை	2-00
சு. க. பசுபதி,	புலோலி கிழக்கு ,,	2-00
கி. சிதம்பரப்பிள்ளை,	புலோலி தெற்கு ,,	2-00
T. ஆழ்வாப்பிள்ளை,	புற்றளை புலோலிதெற்கு பருத்.	2-00
ம. ஞேமான்பிள்ளை,	குடத்தனை	2-00
பா. யக்கிரியாசு,	தும்பளை பருத்தித்துறை	2-00

ஓர் வேண்டுகோள்

சங்க அங்கத்துவப்பணம் இதுவரை செலுத்தத் தவறிய வைத்திய நண்பர்கள் தனாதிகாரியவர்களின் விலாசத்துக்கு பணத்தை அனுப்பிச் சங்கத்தை வளர்க்கும்படி தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். செலுத்திய பணத்துக்குப் பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

விலாசம்:- வைத்தியர் க. வேலாயுதபிள்ளை,

— சங்கத் தனாதிகாரி —

திருநெல்வேலி கிழக்கு :: யாழ்ப்பாணம்.

K. வேலுப்பிள்ளை, நெடுந்தீவு மேற்கு	10-00
மா. செல்லையா, ஏழாலை	2-00
சி. இராஜகுலசூரியர், சுன்னாகம்	5-00
J. சவரிமுத்து, ஊர்காவற்றுறை	10-00
K. தம்பையா, K. K. S. றோட் சுன்னாகம்	5-00
சி. பண்டாரம், அச்சுவேலி	5-00
கி. விநாசித்தம்பி „	5-00
ம. பொன்னையா „	10-00
சு. ஆசையர் „	10-00
அ. புலேந்திரன் „	5-00
ம. பொன்னு, அச்சுவேலி வடக்கு	5-00
V K வேலுப்பிள்ளை, சிவன்கோயில்மேற்குவீதி கொட்டடி	10-00
M. பொன்னையா, நாவற்குழி கைதடி	5-00
நா. பொன்னம்பலம், உ. நும்பராய் வடக்கு	5-00
காசிப்பிள்ளை சிவகாமி, நல்லூர் மார்க்கெட்	5-00
S. V. பொன்னுத்துரை, ஆனைக்கோட்டை	5-00
வேலுப்பிள்ளை கந்தையா, வரணி வடக்கு	2-00
S. குமாரவேற்பிள்ளை, D A. M மெயின் ஸ்ரீற் சுன்னாகம்	5-00
P. ஸ்ரீபதிசர்மா ஐயர் D.A.M. துன்னாலை வடக்கு கரவெட்டி	2-00
இராஜயோகி K. நடராசபிள்ளை, கொக்குவில் மேற்கு	5-00
V. சோமசுந்தரம், சரவணை வேலணை	2-00
K. லீயோ, நவாலி	5-00
வெ. ந. செல்லையா, பெருமாள் கோவிலடி	5-00
காசிப்பிள்ளை கதிரேசு, வீமன்காமம் தெல்லிப்பளை	5-00
சீ. இராயப்பு, உடுப்பிட்டி வல்வெட்டித்துறை	5-00
S. கணபதிப்பிள்ளை, காரைநகர்	5-00
S. செல்வத்துரை, கொடிகாமம்	5-00
க. சின்னத்தம்பி, நெடுந்தீவு கிழக்கு	5-00
ஆறுமுகம் சரவணமுத்து, 144 நல்லூர் டெம்பிள்றோட்	5-00
வே. சின்னத்தம்பி, கைதடி வடக்கு சாவகச்சேரி	10-00
சு. சின்னத்துரை, கச்சேரியடி	5-00
பொ. வீரகத்தி, பொலிகண்டி ஒதியாவளவு வல்வெட்டித்துறை	5-00
S. கந்தையா, கந்தசாமிகோயில் வடக்கு இணுவில் மேற்கு	5-00
ம. சின்னப்பு, சென். செபஸ்தியான் றோட் கரையூர்	10-00
N. T. N. S. முருகேசபிள்ளை, கச்சேரியடி	10-00

அடுத்த இதழில் ஏனைய வைத்தியர்களின் பெயர்களும் பணம் அனுப்பியவுடன் வெளியிடப்பெறும்.

"மணிவாசகம்"

க. தி. சம்பந்தன் எழுதியது.

எமது குழந்தைகளுக்கு இன்பத்தையும், ஊக்கத்தையும் தருவன. சிறந்த பண்பாட்டையும், ஆழ்ந்த இலட்சியங்களையும் காட்டுவன.

தத்துவம், விஞ்ஞானம் சரித்திரம் என்பன, வகுப்புகளுக்கேற்றபடி கதைகளாகவும், கட்டுரைகளாகவும் அமைக்கப்பெற்றிருக்கின்றன.

முதற் புத்தகம்	....	....	40
இரண்டாம் புத்தகம்	....	....	50
மூன்றும் புத்தகம்	....	....	60
நான்காம் புத்தகம்	....	....	70
ஐந்தாம் புத்தகம்	....	....	80
ஆறும் புத்தகம்	....	....	90
ஏழாம் புத்தகம்	....	....	1-00

உப பாட புத்தகங்கள்

கண்ணன்	....	....	35
இராமாயணம்	....	....	40
பாரதம்	....	....	50
கண்ணகி	....	....	அச்சில்

எஸ். எஸ். சண்முகநாதன் & சன்ஸ்

வண்ணார்பண்ணை : : யாழ்ப்பாணம்.

செ. சிவக்கொழுந்து & சன்

மருந்துச்சரக்கு வியாபாரம்

52, பெரியகடை, : : யாழ்ப்பாணம்.

ஸ்தாபிதம் :- 1923

மருந்துச் சரக்கு வியாபாரத்தில் நீண்டகால அனுபவம் வாய்ந்தவர்கள்.

எங்களிடம் சிறந்த ரகமானதும் புதிதானதுமான எல்லாவித மருந்துச் சரக்குகளும், கோரோசனை கஸ்தூரி, குங்குமப்பூ, புனுகு, பச்சைக்கற்பூரம், முதலியவைகளும், அபிஷேகதிரவியங்களும்

சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

லெக்ஷ்மி விலாஸ்
சைவாள் காப்பி ஹோட்டல்

★ நவீன மிட்டாய்கள்
உயர்ந்த பலகாரங்கள் ★

சுத்தம்–சுகாதாரம்–தூய்மை எங்கள் உணவில் காண்க.

சுத்தமான நெய்யில் எங்கள் பட்சணங்கள் சுவைகனிந்து இன்பந்தரும்.

எஸென்ஸ் காப்பி—மல்லிக் காப்பி—தேனீர் மற்றும் பலவித பானங்களைப் பருகி

—ஆனந்தியுங்கள்.—

தில்லைவனம்பிள்ளை — காப்பி ஹோட்டல்

205, கே. கே. எஸ் றேட், யாழ்ப்பாணம்

மருந்துச் சரக்குகள்

சகலவிதமான
உயர்ந்த மருந்துச் சரக்குகளும்
எங்களிடம்
நிதானமான விலைக்குக் கிடைக்கும்.

ஸ்பெயின் தேசத்துக் "குங்குமப்பூ"
எங்களுக்கு நேரில் வருகிறது.
வந்து வாங்கிப் பாருங்கள்!

கோரோசனை, பச்சைக்கற்பூரம், கஸ்தூரி,
மற்றும் பாஷாணச் சரக்குகள்,
சுத்தமான நெல்லிக்காய்க் கெந்தகம், ரசம்
யாவும் நேரில் தருவித்து நயத்தில் தருகின்றோம்.
ஒருதடவை பரீட்சித்துப் பாருங்கள்!

கே. இரத்தினசபாபதி அன் சன்ஸ்,
131, கே. கே. எஸ். றோட்,
பெரியகடை :: யாழ்ப்பாணம்.